வைகாசி | மாதம் ஒருமுறை | மே

24 பக்கங்கள் | விலை ரூ.20

# எங்கள் தேசம்

திருவள்ளுவர் ஆண்டு 2049 | மீனம்

ஓர் இனத்தின் பெருங்கனவு!



## தகப்பனில்லா வீடு போல, தலைவனில்லா நாடாகிவிட்டது தமிழகம்

தமிழர்க்கென்று தனி மதமாக தமிழத்தை நிறுவுவோம்! 8

கடக்க இயலா நினைவுகளின் துயர்நதி! 14

தனிமனித வஞ்சம் தீர்க்கச் சட்டத்தைத் தவறாகப் பயன்படுத்துவதா? 16

செந்தமிழன் சீமான் பதில்கள் 24

# சோமாலியா போல தமிழகத்தை மாற்றத் துடிக்கிறார்கள்

## எச்சரிக்கும் சீமான்

**காவிரி நதிநீர் உரிமை மீட்பு ஒன்றுகூடல் 27.04.18 அன்று திருச்சி, கல்லணையில் நடைபெற்றது. இதில் நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் செந்தமிழன் சீமான் அவர்கள் பங்குபெற்று உரையாற்றினார்.**

மேலும், இந்நிகழ்வில் தமிழ்த்தேசியப் பேரியக்கத்தின் தலைவர் பெ.மணியரசன், தமிழ்நாடு கொங்கு இளைஞர் பேரவைத் தலைவர் தனியரசு, தமிழர் கலை, இலக்கிய, பண்பாட்டுப் பேரவை சார்பில் பெருந்தமிழர் பாரதிராஜா, அமீர், வெற்றிமாறன், கவுதமன், வீ.சேகர், யார் கண்ணன், பேரரசு, கிரா மற்றும் நடிகர் விக்னேஷ் உள்ளிட்டோரும் பங்குபெற்றனர்.

**இதில் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் அவர்கள் பேசிய உரையின் தொகுப்பு பின்வருமாறு:**

***உணர்வெழுச்சியோடு கூடி நிற்கிற உறவுகள் அனைவருக்கும் அன்புநிறைந்த வணக்கம்.***

எகிப்தில் அணை கட்டப் போராடித் தோற்றுப்போனக் காலக்கட்டத்தில் பாய்ந்து ஓடோடி வரும் நீரைத் தடுத்து பாசனத்திற்குப் பயன்படுத்திட அணைகட்டிக் காட்டினான் நமது பாட்டன் கரிகாலபெருவளச்சோழன். அந்தப் பாட்டன் கட்டிய கல்லணை அருகே கூடிப் போராடுவதுதான் சிறந்ததாக இருக்கும் என்றுதான் இங்குக் கூடியிருக்கிறோம். பல்வேறு இயக்கங்களாக, கட்சிகளாக இருக்கிறபோதும் தமிழினத்தின் உரிமைக்கு ஒரு ஆபத்து நேர்கிறபோது தமிழர் என்கிற தேசிய உணர்வோடு ஒன்றுகூடிப் போராடுகிறோம். ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டிக்கெதிராக முற்றுகைப்போராட்டம் நடத்துகிறபோதும், தற்போது நடக்கிறப் போராட்டங்களிலும் ஒருமித்த உணர்வோடு ஒரே கொடியாய் தமிழ்நாட்டின் கொடியை ஏந்திக் களத்தில் நிற்கிறோம்.

### தேசிய இனங்களிடையே ஏன் இந்த மோதல்?

தமிழர்கள் இந்தளவுக்குப் போராடியும் தண்ணீர் தர மறுப்பதற்குக் காரணங்கள் என்னவாக இருக்கும்? காவிரியில் நீர் கேட்கிறபோது கன்னடர்களுக்கும், தமிழர்களுக்குமிடையே மோதல் வருகிறது. முல்லைப்பெரியாற்று நதிநீர் உரிமையென்று வருகிறபோது தமிழர்களுக்கும், மலையாளிகளுக்குமிடையே மோதல் வருகிறது. பாலாற்று நதிநீர் உரிமையென்று வருகிறபோது தமிழர்களுக்கும், தெலுங்கர்களுக்குமிடையே மோதல் வருகிறது. தெலுங்கும், கன்னடமும், மலையாளமும் தமிழிலிருந்து கிளைத்த மொழிகள்தான். திராவிட நாடு என்கிற முழக்கம் ஏற்கனவே இங்கு முன்வைக்கப்பட்டிருக்கிறது. எனவே, இத்தேசிய இன மக்கள் யாவரும் ஒன்றாய் நின்றால் இந்தியா இரண்டாகிவிடும் என்பதை உணர்ந்து தீர்க்க வேண்டிய சிக்கல்களைத் தீர்க்காமல் வைத்து திட்டமிட்டே தேசிய இனங்களுக்கிடையே மோதல் போக்கையும், இனப்பகையையும் உருவாக்குகிறார்கள்.

### தமிழர்களே தூய இனம்!

இந்தியாவில் இருக்கிற மொழிவழித் தேசிய இனங்களிலே தூய இனமாகத் தமிழர்கள்தான் இருக்கிறார்கள். இந்தித் திணிப்பு, நீட் தேர்வு, சரக்கு மற்றும் சேவை வரி என எதுவாயினும் தமிழகம்தான் எதிர்க்கிறது. இந்தியாவிலுள்ள மொழிவழித் தேசிய இனங்களில் தமிழர்கள் மட்டுமே தனி நாடு கேட்டுப் பெரும் போராட்டத்தை முன்னெடுத்திருக்கிறார்கள். அப்போராட்டத்தின் மூலம் தனித்தமிழீழ நாடு மலர்ந்திருந்தால் இந்தியப் பெருநிலத்தில் இருக்கிற மொழிவழித் தேசிய இனங்களில் எவருக்குமில்லாதப் பெருமை தமிழர்களுக்குக் கிடைத்திருக்கும். அவ்வாறு நிகழ்ந்திருந்தால் பெயரளவில்தான் டெல்லி தலைநகராக இருந்திருக்கும். உணர்வளவில் திரிகோணமலையே தமிழர்களுக்குத் தலைநகராக இருந்திருக்கும்.

### போர்க்கோலம் பூண்டிருக்கும் தமிழகம்!

பொருளாதாரத்திற்கு நோபல் பரிசுபெற்ற அமர்த்தியாசென் அவர்கள், ‘தமிழ்நாடு









மட்டும் தனிநாடாக இருந்திருந்தால் உலக வல்லாதிக்கங்களில் ஒன்றாக மாறியிருக்கும். அதற்குக் காரணம், அளப்பெரும் செல்வ வளங்கள் இங்கு கொட்டிக் கிடக்கிறது' என்கிறார். இந்தியாவிலுள்ள 29 மாநிலங்கள், 9 ஒன்றியப் பிரதேசங்களில் இது எதிலுமில்லாத பிரச்சினைகள் தமிழகத்தில் மட்டுமிருக்கிறது. போராட்டங்களமாக, போர்க்களமாகத் தமிழகமே மாறி நிற்பதைப் பார்க்கிறோம். நெசவாளர்கள், மீனவர்கள், உழவர்கள், மருத்துவர்கள், மருத்துவக்கல்லூரி மாணவர்கள், செவிலியர் பெருமக்கள், ஆசிரியப்பெருந்தகைகள் என எல்லாத் தரப்பு மக்களும் வீதிக்கு வந்து போராடுகிறார்கள். எல்லாவற்றுக்கும் வீதிக்கு வந்து போராடுகிற நிலையில் மக்கள் இருக்கிறபோது நல்லாட்சிக் கொடுப்பதாக அரசு சொல்வது எவ்வளவு பெரிய கொடுமை என்பதனைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

## வேட்டைக்காடாகும் தமிழர் நிலம்!

உள்நாட்டு, வெளிநாட்டு பெருமுதலாளிகளின் வள வேட்டைக்காடாக தமிழகம் மாறிக் கொண்டிருக்கிறது. இன்னும் சிறிது காலத்தில் தமிழகம் காஷ்மீர் போல, நாகலாந்து போல, மணிப்பூர் போல மாறிவிடும். தனுசுகோடியை மனிதர்கள் வாழத்தகுதியற்ற நிலமென அறிவித்து இராணுவ முகாம் அமைக்க எடுத்துக் கொள்கிறது மத்திய அரசு. தனுசுகோடி மட்டுமல்லாது தமிழகமே வாழ்வதற்குத் தகுதியற்றதாகத்தான் தற்போது மாறிக் கொண்டிருக்கிறது.

## இராணுவமயமாக்கி நிகழ்த்தப்பட இருக்கும் பேராபத்து!

நியூட்ரினோ உலைக்கு அருகே மின்கம்பிகளை அமைத்து துணை இராணுவப்படையை நிறுத்தி அதனை இராணுவமயமாக்குவார்கள். கூடங்குளத்தில் அணு உலையல்ல, அணு உலை பூங்காவினை

10,000 ஏக்கரில் அமைப்பதுதான் மத்திய அரசின் திட்டம். அதனை எதிர்த்துப் போராடுகிற மக்கள் அத்தனைப் பேர் மீதும் 2,00க்கும் மேற்பட்ட வழக்குகள் தொடுக்கப்பட்டிருக்கின்றன. அச்சுறுத்தி, அடக்கி, ஒடுக்கி, போர்க்குணமற்றப் புழுக்களாக மக்களை மாற்ற நினைக்கிறார்கள். மீத்தேன் எடுப்பதாக இருந்தாலும், ஹைட்ரோகார்பன் எடுப்பதாக இருந்தாலும் இராணுவ முகாம்களைப் போட்டு நாகலாந்தாகவும், மணிப்பூராகவும் இந்நிலத்தை மாற்றுவார்கள்.

## தமிழர்கள் மீது தொடுக்கப்பட்டத் தாக்குதல்!

முதலில் தாய்மொழியிலிருந்து தமிழர்களை வெளியேற்றினார்கள். தமிழ் படிப்பது, பேசுவது, எழுதுவது இழிவென்ற மனநோயாளியாகத் தமிழர்கள் மாறினார்கள். இலவசங்களைக் கொடுத்து உழைப்பிலிருந்து தமிழர்களை வெளியேற்றினார்கள். உழைப்பை உற்பத்தியில் ஈடுபடுத்தி அதனைப் பெருக்காமல் சோம்பி இருக்கச்செய்தார்கள். வேளாண்மை செய்வதற்கே ஆட்களில்லாது உழைக்கும் மக்களை விளை நிலங்களிலிருந்து வெளியேற்றினார்கள். இறுதியாக, தாய் நிலத்திலிருந்தே தமிழர்களை வெளியேற்றுகிற வேலை தற்போது நடந்துகொண்டிருக்கிறது. நிலமற்ற கூலிகளாகத் தமிழர்களை மெல்ல மெல்ல மாற்றிக் கொண்டிருக்கிறார்கள்.

ஈழத்தாயகத்தில் எப்படித் திட்டமிட்டுச் சிங்களக் குடியேற்றங்கள் நடந்ததோ அதனைப் போல தமிழர் நிலத்தில் திட்டமிட்டு வடநாட்டவர்களைக் குடியேற்றிக் கொண்டிருக்கிறார்கள். கடந்த 3 ஆண்டுகளில் மட்டும் ஒரு கோடி இந்திக்காரர்கள் குடியேறியிருக்கிறார்கள். சரியாக இன்னும் ஐந்தாண்டுகளில் தமிழர்கள் குறுங்குழுக்களாகத் மாற்றப்பட்டுவிடுவார்கள். அரசியல், அதிகாரம் என எதனையும் நாம் தீர்மானிக்க முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டு விடுவோம்.

## அதிகாரம் வலிமையானது!

காவிரி உரிமைக்காக எல்லா வகைப் போராட்டங்களையும் முன்னெடுத்து விட்டோம். என் தம்பி விக்னேசு காவிரி உரிமைக்காக தீக்குளித்துச் செத்தான். இந்நாடு அதற்கு எந்த மதிப்பும் அளிக்கவில்லை. எனக்காகப் பேசிய அண்ணன் மன்சூர் அலிகானை கைதுசெய்கிறார்கள். இன்றுவரை எஸ்.வி.சேகரை கைது செய்யவில்லை. எஸ்.வி.சேகர் வீட்டுக்கு முன்பு போராடியப் பத்திரிக்கையாளர்களைக்கூட கைதுசெய்திருக்கிறார்கள். ஆனால், எஸ்.வி.சேகர் மீது கைது நடவடிக்கையில்லை. இது யாவற்றிலிருந்தும் அதிகாரம் மிக வலிமையானது என்பதனை உணர்கிறோம்.

## தண்ணீர் எனும் உயிராகாரம்!

இன்னொரு தலைமுறை வாழ்வதற்கேற்ற நிலமாக இதனை விட்டுச்செல்ல வேண்டியப் பொறுப்பும், கடமையும் ஒவ்வொருவருக்கும் கையளிக்கப்பட்டிருக்கிறது. இப்போதே இவ்வளவு தண்ணீர் பற்றாக்குறை இருக்கிறதென்றால் இன்னும் 5 ஆண்டுகள் கழித்து எவ்வாறிருக்கும்? உலகமே பெரும் தண்ணீர் பஞ்சத்தை எதிர்நோக்கியிருக்கிறது. உலகில் மொத்தம் 2 விழுக்காடுதான் நீர்தானிருக்கிறது. அதனை 20 விழுக்காடாக எவ்வாறு உயர்த்தலாம் எனச் சிந்திக்காது, அதனை எவ்வாறு வணிகமாக்கலாம் எனச் சிந்தித்ததுதான் துரோகச் சிந்தனை. தண்ணீருக்காகப் போராடுகிற நாங்களே தண்ணீரைப் போத்தலில் வாங்கிக் குடிக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறோம். மனிதர்கள் நாம் தண்ணீரைப் போத்தலில் வாங்கிப் பருகுகிறோம். மற்ற உயிரினங்கள் தண்ணீருக்கு என்ன செய்யும் என்கிற கேள்வி என்றைக்கு எழுகிறதோ அன்றுதான் உயிர்மநேயம் பிறக்கும்.

## நிலத்தைப் பறிக்க நடக்கும் சதி!

தமிழகம் ஒரு பாலைவனமாக, உயிரினங்கள் வாழ்வதற்குத் தகுதியற்ற ஒரு நிலமாக மாற்றப்பட்டுக் கொண்டிருக்கிறது. காவிரியில் நீர் தந்தால் தமிழக விவசாயிகள் நிலத்தைவிட்டு வெளியேற மாட்டார்கள். அதனால், மீத்தேன், ஹைட்ரோ கார்பன் போன்றவை எடுப்பதற்காக நிலத்தைக் கையகப்படுத்த முடியாது என்பதால் இது நிலத்தைப் பறிப்பதற்கு மேற்கொள்ளப்படும் யுக்தியாகும்.

## சாகர்மாலா எனப்படும் பேரழிவுத் திட்டம்!

திருச்சியிலிருந்து தஞ்சாவூருக்கு அரை மணிநேரத்தில் சென்றுவிடலாம். அப்படியிருக்கையில் தஞ்சாவூரில் புதிதாக வானூர்தி நிலையம் ஏன் அமைக்கிறார்கள்? கோவையிலிருந்து சேலத்திற்கும் அரை மணிநேரத்தில் சென்றுவிடலாம். சேலத்தில் வானூர்தி நிலையமே தேவையற்றது. ஆனாலும், அங்கு ஏற்கனவே வானூர்தி நிலையம் அமைக்கப்பட்டு அதனை 5,00 ஏக்கருக்கு தற்போது விரிவுபடுத்துகிறார்கள். இதற்கெல்லாம் காரணம், கடல்மாலை எனப்படும் சாகர்மாலா திட்டம்தான்.

இத்திட்டத்திற்கு 3,33 இலட்சம் கோடி நிதியானது பிலிப்பைன்சில் இருக்கிற ஏசியன் டெவலப்மென்ட் பேங் எனும் வங்கியானது ஒதுக்கியிருக்கிறது. இந்நிதியானது அமெரிக்காவிலிருக்கிற ராக்பெல்லர் பவுண்டேசனிடமிருந்து இவ்வங்கிக்கு வந்திருக்கிறது. பங்காளாதேஷ், இந்தியா, இலங்கை, தாய்லாந்து, மியான்மர் ஆகிய நாடுகள் கூட்டுசேர்ந்து இதற்கு ஒப்பந்தமிட்டிருக்கிறது. சாலைப் போக்குவரத்து, தொடர்வண்டிப் போக்குவரத்து, வானூர்திப் போக்குவரத்து என எல்லாவற்றையும் துறைமுகத்தோடு இணைத்து இந்நாடுகளின் வளங்களைக் கொள்ளையடிப்பதுதான் இதன் நோக்கம். இதில் எதனை ஏற்றுமதி செய்யப் போகிறார்கள்? எதனை இறக்குமதி செய்யப்போகிறார்கள்? எம் மண்ணின் வளங்களைக் கொள்ளையடித்து ஏற்றுமதி செய்வார்கள்.

அரிசியையும், வெங்காயத்தையும் இறக்குமதி செய்வார்கள். 1960களில் பூமியின் சொர்க்கமாக இருந்த சோமாலியா இன்றைக்குப் பஞ்சப்பிரதேசமாக, மனிதர்களை மனிதர்களே உண்ணும் நரக உலகமாக மாறி நிற்கிறது. இதேபோலத்தான் நைஜீரியாவும், வெனிசுலாவும் மாறியிருக்கிறது. அந்த நிலை தமிழகத்திற்கு வந்துவிடக்கூடாதென்றுதான் நாங்கள் போராடிக் கொண்டிருக்கிறோம்.

## வெல்லும்வரை போராடுவோம்!

'நாம் போராடினாலும் சாவோம்; போராடாவிட்டாலும் சாவோம். போராடினால் வாழ்வதற்கு வாய்ப்பிருக்கிறது. அதனால், போராடுவோம்' என்கிறார் தலைவர் பிரபாகரன். அதனால், உறுதியாக நின்று போராடுவோம். 'உன்னை யாரும் தோற்கடிக்க முடியாது நீ கொண்டுள்ள நம்பிக்கையில் தோற்கும்வரை' என்கிறார் மாவீரன் சுபாஷ்சந்திரபோஸ். 'வரலாற்றில் நல்லவர்கள்கூடத் தோற்றதாகச் செய்தியுண்டு. நம்பிக்கை கொண்டவர்கள் தோற்றதில்லை' என்கிறார் தலைவர் பிரபாகரன். அதனால், நம்பிக்கை கொண்டு நில்லுங்கள். உறுதியாக நாம் வெல்வோம்.







# தகப்பனில்லா வீடு போல தலைவனில்லா நாடாகிவிட்டது தமிழகம்

## சீமான் முழக்கம்

**நீட் வேண்டாம்! நீர் வேண்டும் என்கிற முழக்கத்தை முன்வைத்து நீட்தேர்வு - காவிரி மேலாண்மை வாரியம் - மீத்தேன் நியூட்ரினோ - ஸ்டெர்லைட் பெட்ரோலிய மண்டலம் - சாகர்மாலா உள்ளிட்ட பலமுனைகளில் தமிழ்நாட்டை வஞ்சிக்கும் இந்திய அரசைக் கண்டித்து மக்கள் திரள் போராட்டம் 03.05.18 அன்று கடலூர், மஞ்சக்குப்பம் திடலில் நடைபெற்றது. இதில் தலைமை ஒருங்கிணைப்பாளர் செந்தமிழன் சீமான் அவர்கள் பங்குபெற்று கண்டனவுரையாற்றினார்.**

இயக்குநர் வ. கௌதமன் ஒருங்கிணைப்பில், தமிழர் உரிமைக்கான மாணவர்கள் இளைஞர்கள் கூட்டமைப்பினர் முன்னெடுத்த இப்போராட்டத்தில் தமிழ்த்தேசியப் பேரியக்கத்தின் தலைவர் பெ.மணியரசன், பேராசிரியர் த.ஜெயராமன், தமிழர் கலை இலக்கியப் பண்பாட்டுப் பேரவை சார்பில் பெருந்தமிழர் பாரதிராஜா, வெற்றிமாறன், பேரரசு, முக்குலத்துப் புலிப்படைகள் அமைப்பின் தலைவர் கருணாஸ், தயாரிப்பாளர் சுரேஷ் காமாட்சி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

**இதில் தலைமை ஒருங்கிணைப்பாளர் செந்தமிழன் சீமான் அவர்கள் ஆற்றிய உரையின் தொகுப்பு பின்வருமாறு,**

***உணர்வெழுச்சியோடு கூடி நிற்கிற உறவுகள் அனைவருக்கும் அன்புநிறைந்த வணக்கம்.***

நீட் தேர்வின் மூலம் நமது பிள்ளைகளின் மருத்துவக் கனவில் மண்ணை அள்ளிப் போட்டிருக்கிறார்கள். நீட் தேர்வுக்கெதிராக மற்ற மாநிலங்கள் போராடவில்லையென்றால் அம்மாநிலங்களுக்கு எத்தகையப் பாதிப்புமில்லை என்பதால்தான் அவைப் போராடவில்லை. இந்தியாவிலேயே அதிகப்படியான மருத்துவக்கல்லூரிகளைக் கொண்டிருப்பது தமிழகம்தான். நமது மக்களின் உழைப்பிலிருந்து நமது பிள்ளைகளுக்காகவே இக்கட்டமைப்பு உருவாக்கப்பட்டது. இப்போது கொண்டு வரப்பட்டிருக்கும் நீட் தேர்வின் மூலம் இக்கல்லூரிகளில் பிற மாநிலத்தவர்கள் கல்வி கற்கவே வாய்ப்புகள் அதிகம் இருக்கின்றன. படித்துக் கொண்டே சிற்றூர்களிலும், பழங்குடி கிராமங்களிலும் மருத்துவம் செய்யும் மருத்துவர்களுக்கு சேவை மதிப்பெண்கள் வழங்கப்பட்டு வந்தது. அந்த முறையில் 50 விழுக்காடு இட ஒதுக்கீடு இருந்தது. உச்ச நீதிமன்றம் கூறியதென்று அம்முறையினை மத்திய அரசு அகற்றிவிட்டது.

### குலைக்கப்படும் மருத்துவச்சேவை!

ஒரு மருத்துவக்கல்லூரி மாணவன் படித்துவிட்டு வெளியே வருவதற்கு 11 இலட்சத்திற்கு மேல் செலவாகிறது. அவ்வளவும் மக்களின் வரிப்பணம். உழைக்கும் மக்களின் பணத்திலேயே மாணவர்கள் ஒவ்வொருவரும் படிக்கிறார்கள். அத்தகைய மக்களுக்கு மருத்துவ வசதி கிடைக்க வாய்ப்பில்லை என்கிற நிலையினை மத்திய அரசு தற்போது உருவாக்கியிருக்கிறது. நீட் தேர்வை எழுதி மருத்துவம் படிப்பவர் எவரும், அரசு மருத்துவமனைகளுக்கு மருத்துவராக முன்வர மாட்டார். எந்த தனியார் மருத்துவமனை அதிக ஊதியம் தருகிறதோ, எந்த நாட்டில் அதிகப்படியான பணம் சம்பாதிக்க முடியுமோ அங்குதான் செல்வார்கள். பிறகு மக்களுக்கான சேவை எங்கிருக்கும்? இவ்வாறு மருத்துவச்சேவை கிடைக்க வாய்ப்பற்ற ஒரு சூழலை நீட் தேர்வின் மூலம் மத்திய அரசு உருவாக்குகிறது.

### உலக வர்த்தகக் கழகத்தில் அடமானம்!

உலக வர்த்தகக் கழகத்தில் இந்நாடு இட்டிருக்கிற ஒப்பந்தம்தான் இதற்கெல்லாம் முழுமுதற் காரணமாகும். கல்வி, மருத்துவம், குடிநீர் விநியோகம், போக்குவரத்து, மின் விநியோகம் ஆகியன யாவும்





தவிக்கிறார்கள். அவ்வெள்ள நீரைச் சேமிக்கத் துப்பற்றவர்களாக நம்மை ஆளும் ஆட்சியாளர்கள் இருக்கிறார்கள். நம்மிடம் அதிகாரமிருந்தால் சிறப்புக் காவல்படை அமைத்து காவிரி நீர் தராதவரை நெய்வேலி மின்சாரத்தைத் தராது தடுத்திருப்போம்.

## தலைவனில்லா நாடு!

இந்தியாவின் குப்பைத்தொட்டியாக தமிழகமும், தமிழகத்தின் குப்பைத்தொட்டியாக கடலூரும் இருக்கிறது. சேலத்திலிருந்து தஞ்சாவூருக்கு எட்டு வழிச்சாலை அமைப்போம் என்கிறார்கள். இச்சாலைகள் மக்கள் பயணத்திற்காக அல்ல; வளங்களைக் கொள்ளையடித்துக் கொண்டு செல்வதற்காகத்தான். நியூட்ரினோ உலையை இமய மலையில் அமைக்காது ஏன் மேற்குத்தொடர்ச்சி மலையில் அமைக்கிறார்கள்? காங்கிரசு கட்சி தொடர்ச்சியாக 10 ஆண்டுகள் ஆளும்போது மேலாண்மை வாரியம் அமைத்திருக்கலாமே ஏன் செய்யவில்லை? நமது நிலத்தை இராணுவமயமாக்கிக் கொண்டிருக்கிறார்களே ஏன்? தகப்பன் இல்லாத வீடு போல தலைவன் இல்லாத நாடாகத் தமிழகமிருப்பதாலேயே இவையெல்லாம் நடக்கிறது. தலைவர் பிரபாகரன் அவர்கள் கூறியது போல, மற்ற இனங்களுக்கு வாழ்க்கையில் அவ்வப்போது போராட்டங்கள் வருகிறது. தமிழ்த்தேசிய இன மக்களுக்கு போராட்டமே வாழ்க்கையாக மாறிவிட்டது.

## பற்றியெரியட்டும் போராட்ட பெருநெருப்பு!

கதிராமங்கலம், நெடுவாசல், தூத்துக்குடி என ஆங்காங்கே இருக்கும் போராட்ட நெருப்புத்துண்டுகளை ஓரிடத்தில் குவித்து ஒரு பெருநெருப்பாக மாற்ற வேண்டிய காலக்கடமை, வரலாற்றுத்தேவை உருவாகியிருக்கிறது. 'இதுவரை வாழ்ந்தது போல இனி வாழவே முடியாது என்கிற நிலை உருவாகுமானால் பல கோடி மக்கள் இணைந்து புரட்சியை முன்னெடுப்பார்கள்' என்கிறார் லெனின். அத்தகைய நிலை இன்றைக்கு உருவாகியிருக்கிறது.

## போராட்டங்களை ஒடுக்கும் தமிழக அரசு!

காவிரி நதிநீர் உரிமைக்காகக் கர்நாடகப் பேருந்தை முற்றுகையிட்டுப் போராடிய என் தம்பி கடல் தீபன் மீது குண்டர் சட்டத்தைப் பாய்ச்சியிருக்கிறார்கள். காவிரி நீரை பெற்றுக் கொடுக்க வேண்டுமென்று தமிழக அரசு உளமாற நினைத்திருந்தால் காவிரி மீட்புப் போராட்டங்களை ஒரு நொடியில் வெகுமக்கள் போராட்டமாக மாற்றியிருக்க முடியும். மெரீனா கடற்கரையில் போராடுவதற்குத் தடையில்லை என்று அறிவித்துவிட்டாலே இலட்சக்கணக்கான மக்கள் கூடிப்போராடுவார்கள். ஆனால், அதனை செய்ய மறுத்து வருகிறது தமிழக அரசு. காவிரி உரிமையைவிட மெரீனா கடற்கரைதான் முக்கியமா? என உயர் நீதிமன்றமே தமிழக அரசை நோக்கிக் கேள்வியெழுப்பிருக்கிறது.

## வெடிக்கட்டும் மக்கள் சனநாயகப் புரட்சி!

'சிதைந்து அழிந்துக் கொண்டிருக்கிற தமிழ்த்தேசிய இன மக்கள் பாதுகாப்பாக வாழ்வதற்குப் போராடித்தான் ஆக வேண்டும் என்கிற நிலைக்குத் தள்ளப்பட்டு நிற்கிறார்கள். இந்த வரலாற்றின் பேரழைப்பிலிருந்து, வரலாற்றுப் பெரும்பணியிலிருந்து தமிழ் இளந்தலைமுறையினர் ஒருபோதும் விலகிச் செல்ல முடியாது' என்கிறார் தலைவர் பிரபாகரன் அவர்கள்.

இப்போராட்டங்கள் யாவும் நமக்கானவை; நாளையத் தலைமுறைக்கானவை. 'தகுதியுள்ளவைத் தப்பிப் பிழைக்கும்' என்கிறார் டார்வின். நாம் தகுதிவாய்ந்தவர்களாக மாறிக்கொள்ள வேண்டும். நம்மை நாமே தற்காத்துத் தகவமைத்துக் கொள்ள வேண்டும். ஏறக்குறைய எல்லா உரிமைகளையும் பறித்துவிட்டார்கள். இது எல்லாவற்றிற்கும் இருக்கிற ஒற்றைத்தீர்வு மக்கள் சனநாயகப் புரட்சி ஒன்றுதான் என்பதனை உணர வேண்டும்.






> “ நீட் தேர்வு என்பது தேசியத் தகுதி நுழைவுத் தேர்வு அல்ல! இது உலக நுழைவுத்தேர்வு ”



நமக்குச் சேவைகள். ஆனால், உலக வர்த்தகக் கழகத்திற்கு இவையெல்லாம் வணிகம். இதனைத் தனியார் முதலாளிகளுக்குக் கொடுக்கச் சொல்வது இக்கழகத்தின் நோக்கம். பொதுத்துறை வங்கிகளையெல்லாம் தனியாருக்குத் தாரைவார்க்கக் கூறுகிறார்கள். எல்லாவற்றையும் தனியார்வசமளித்தால் அரசினுடைய வேலைதான் என்ன?

## மறைமுக இந்தித் திணிப்பு!

ஜிப்மர், எய்ம்ஸ் மருத்துவக் கல்லூரிகளுக்கு நீட் தேர்வு இல்லை. இதன்மூலம், மத்திய அரசு நடத்துகிற மருத்துவக் கல்லூரிகள் தரமாக இருக்கிறது என்கிறார்கள். மாநிலத்தில் கல்வி தரமாக இல்லை எனக் கோரி சி.பி.எஸ்.இ. கல்வி முறைக்கு வரக்கோருகிறார்கள். இந்தியை நேரடியாகத் திணித்தால் தமிழர்கள் எதிர்ப்பார்கள் எனக் கோரி மத்தியப் பாடத்திட்டத்தின் மூலம் புகுத்துகிறார்கள். இந்தியைப் படித்தால் வடஇந்தியாவில் வேலை கிடைக்கும் என்கிறார்கள். இந்தி பேசும் மாநிலங்களில் எல்லாம் வேலைவாய்ப்பில் தன்னிறைவு அடைந்துவிட்டார்களா?

## நீட் என்பது உலக நுழைவுத் தேர்வு!

இம்மாநிலக் கல்வி முறையில் என்ன பிழை கண்டார்கள்? இக்கல்வி முறையிலிருந்துதான் அமெரிக்காவில் இருக்கிற ஆகச்சிறந்த மருத்துவரான ஐயா ஜவஹர் பழனியப்பன் வந்தார். இதுவரைக்கும் இக்கல்வி முறையில் பயின்று வந்த மருத்துவர்கள் சரிவர மருத்துவக் சிகிச்சை செய்யாதிருந்தார்களா? ஒரு தேர்வின் மூலம் கல்வியின் தரத்தை உயர்த்தி விட முடியும் என்பது எவ்வளவு பெரிய ஏமாற்று வேலை? நீட் தேர்வில் ஆந்திர மாநிலமானது விலக்குப் பெற்றிருக்கிறது. அதனைப் போல தமிழகமும் பெற்றிருக்கலாமே? அவ்வாறு ஏன் பெறவில்லை? நீட் தேர்வு என்பது தேசியத் தகுதி நுழைவுத் தேர்வு அல்ல! இது உலக நுழைவுத்தேர்வு. இத்தேர்வின் மூலம் வெளிநாட்டவர்களும் இம்மண்ணில் மருத்துவம் படிக்க வாய்ப்புகள் இருக்கின்றன.

## ஒரே நாட்டிலிருப்பதுதான் பிரச்சினையா?

பாகிஸ்தானோடு விளையாட்டில்கூட இந்தியா பகைமைப் பாராட்டுகிறது. அந்தப் பாகிஸ்தானோடு சிந்து நதியை இந்தியா பகிர்ந்து கொள்கிறது. பகை நாட்டோடுகூட நீரைப் பகிர்ந்து கொள்ள முடியும். பக்கத்திலுள்ள ஒரு மாநிலத்தோடு நீரைப் பகிர்ந்து கொள்ள முடியாதென்றால் நாங்கள் ஒரே நாட்டில் இருப்பதுதான் பிரச்சினையா?

## நீர் மேலாண்மையின்மை!

தமிழகத்தில் 4,000 டி.எம்.சி. நீர் மழையாகப் பொழிகிறது. அதில் 1,500 டி.எம்.சி. நீரைத்தான் பயன்படுத்துகிறோம். மீதி 2,500 டி.எம்.சி. நீரை வீணாகக் கடலில் கலக்கவிடுகிறோம். 50 ஆண்டுகளாக தமிழகத்தை ஆண்ட ஆட்சியாளர்கள் மழை நீரைச் சேமிக்க முன்வரவில்லை. வீட்டில் மழைநீரைச் சேமிக்கக் கோரியவர்கள் நாட்டில் மழைநீரைச் சேமிக்காததன் விளைவாகவே இவ்வளவு இழிவான நிலையை எட்டியிருக்கிறோம். எமது பாட்டன் அரசேந்திரச்சோழன் வெட்டிய வீரநாராயண ஏரி தூர்ந்து போய்விட்டது. ஒவ்வொரு ஆண்டும் வெள்ளத்தில் மக்கள்



# தமிழர்க்கென்று தனி மதமாக தமிழத்தை நிறுவுவோம்!

**நாம் தமிழர் கட்சியின் வீரத்தமிழர் முன்னணி சார்பாக மறம் வீழ்த்தி அறம் காத்த மானத்தமிழ் மறத்தி கண்ணகி பெருவிழா பொதுக்கூட்டம் 29.04.18 அன்று தேனி மாவட்டம், உத்தமபாளையத்தில் நடைபெற்றது. இதில் தலைமை ஒருங்கிணைப்பாளர் செந்தமிழன் சீமான் அவர்கள் பண்பாட்டு மீட்சியுரை நிகழ்த்தினார். இப்பெருவிழாவில் தேனி மாவட்ட நிர்வாகிகள் அன்பழகன், ஆனந்தன், ஜெயக்குமார், ஜெயபால் ஞானம் ஆகியோர் முன்னிலை வகித்தனர். மாநில ஒருங்கிணைப்பாளர் வெற்றிக்குமரன் தலைமை வகித்தார்.**

முன்னதாக பறையிசை, கறுப்பு நாடகம் எனத் தமிழரின் தொன்மக்கலைகளோடு நிகழ்வு தொடங்கியது. நிகழ்வில் மழலையர் பாசறை முகிலன், மதுரை மண்டல வீரத்தமிழர் முன்னணி ஒருங்கிணைப்பாளர் அரா.சிவா, மாநில மகளிர் பாசறை ஒருங்கிணைப்பாளர் சீதாலட்சுமி, மாநில இளைஞர் பாசறை ஒருங்கிணைப்பாளர் துரைமுருகன், தஞ்சை நடுவண் மாவட்டச் செயலாளர் கிருஷ்ணகுமார், மாநில ஒருங்கிணைப்பாளர் மருத்துவர் களஞ்சியம் சிவக்குமார், மாநில வீரத்தமிழர் முன்னணி ஒருங்கிணைப்பாளர் அருண்ரங்கராசன், மாநில இளைஞர் பாசறை ஒருங்கிணைப்பாளர் பேராசிரியர் கல்யாணசுந்தரம் ஆகியோர் உரை நிகழ்த்தினர். வீரத்தமிழர் முன்னணியின் மாநில ஒருங்கிணைப்பாளர் முனைவர் செந்தில்நாதன் சேகுவேரா தொகுத்து வழங்கினார்.

## சீமான் சூளுரை

இவர்களோடு மாநில வீரத்தமிழர் முன்னணி ஒருங்கிணைப்பாளர்கள் ஒட்டக்கூத்தன், பெஞ்சமின் என்கிற வெற்றிவேல் பாண்டியன், தூத்துக்குடி கலையரசன், தஞ்சை மண்டல வீரத்தமிழர் முன்னணி ஒருங்கிணைப்பாளர் பாப்பா நாடு மாரிமுத்து ஆகியோரும் நிகழ்வில் பங்கேற்றனர்.

இதில் நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் செந்தமிழன் சீமான் அவர்கள் ஆற்றிய உரையின் தொகுப்பு பின்வருமாறு,

பண்பாட்டுப்புரட்சி இல்லாது அரசியல் புரட்சி வெல்லாது என்கிற இலட்சிய முழக்கத்தை முன்வைத்து நாம் தமிழர் கட்சியினுடைய வீரத்தமிழர் முன்னணி மறம் வீழ்த்தி அறம் காத்த முப்பாத்தாள் கண்ணகி பெருமாட்டியினுடையப் பெருவிழாவை உயர்ந்தோர் வாழ்கிற உத்தமபாளையம் மண்ணில் பேரெழுச்சியாக நடத்திக் கொண்டிருக்கிறது. இவ்விழா சிறக்க உழைத்த எனது உடன் பிறந்தார்களுக்கும், உள்ள மகிழ்ச்சியோடும், உணர்வெழுச்சியோடும் கூடி நிற்கிற எனதருமைச் சொந்தங்களுக்கும் அன்பு நிறைந்த வணக்கம்.!

### வரலாற்றுப் பெரும்பணி!

நீண்ட நெடிய வரலாற்றுப் பெருமைகள் பலகொண்ட தமிழர் என்கிற தேசிய இனமானது இன்றைக்கு மொழி சிதைந்து, இன உணர்வு, மான உணர்வு கெட்டு அரசியல் அதிகாரமற்ற நிலையில் அடிமைப்பட்டு அன்னைத் தாய் நிலத்திலேயே நிலமற்றக் கூலிகளாகி நிர்கதியாக நின்றுகொண்டு இருக்கிற நிலையில், கடைசி உயிர்த்துளியை ஒன்றுதிரட்டி ஒரு தேசிய இனம் தன்னைத் தானே மீட்டுருவாக்கம் செய்து கொள்கிற வரலாற்றுப் பெரும் பணியைத்தான் தமிழ் இளந்தலைமுறையினர் செய்து கொண்டிருக்கிறோம்.

### தமிழர் எனும் தொல்குடிச் சமூகம்!

உலகத்தவர் அனைவரும் தனது தாய்மொழியில் பேசிக் கொண்டிருக்கிறார்கள். தமிழர்கள் நாம் மொழிகளின் தாய்மொழியில் பேசிக் கொண்டிருக்கிறோம். அமெரிக்க மொழியியல் ஆய்வறிஞர் அலெக்ஸ் கோலியர், ‘உலகத்தில்



முதன் முதலாக மனிதர்கள் பேசிய மொழி தமிழ்தான்' என்கிறார். ஜப்பானிய மொழி யியல் அறிஞர் சுஸ்மகோனோ, 'இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு எங்கள் நாட்டிற்குத் தமிழர்கள் வேளாண்மை கற்றுத்தர வந்தார்கள். அவர்களது தாய் மொழியிலிருந்துதான் பல வேர்ச்சொற்களையும், கலைச்சொற்களையும் உருவாக்கிக் கொண்டோம்' என்று கூறுகிறார். ஹார்வேர்டு பல்கலைக்கழகத்தினுடையப் பேராசிரியப் பெருந்தகைகள் ரிச்சார்டு மார்ட்டினும், டோனி ஜோசப்பும், 'தெற்காசியப் பிராந்தியம் முழுமைக்கும் பரவி வாழ்ந்தத் தொல்குடிச் சமூகம் தமிழர்கள்தான்' என்று தனது ஆய்விலே நிறுவுகிறார்கள்.

## பாரத நாடு பைந்தமிழர் நாடு!

இந்தியாவின் ஆட்சி மொழியாக எந்த மொழியைக் கொண்டு வருவதென்கிற விவாதம் எழுந்தபோது, மிகத் தொன்மையான மொழியைத்தான் இந்தியாவின் ஆட்சி மொழியாக்க வேண்டும் என்கிற கருத்து முன்வைக்கப்படுகிறது. 'இந்தியாவின் ஆட்சி மொழியாக தொன்மையான மொழிதான் இருக்க வேண்டுமென்றால் தமிழ்மொழிதான் இந்தியாவின் ஆட்சி மொழியாக வேண்டும். இந்திய மொழிகளிலேயே மிக மிகத் தொன்மையான மொழியான தமிழ்தான். இதனை எந்த வரலாற்றாசிரியரும், தொல்பொருள் ஆராய்ச்சியாளரும் மறுக்க முடியாது. அத்தகையத் தமிழ் மொழி எனது தாய் மொழி என்பதில் பெருமிதம் கொள்கிறேன்' என்றார் நமது தாத்தா கண்ணியமிக்க காயிதே மில்லத். இந்திய நாட்டின் அரசியலமைப்புச் சாசனத்தை வகுத்துத் தந்த அறிவாசான் அண்ணல் அம்பேத்கர் அவர்கள், 'இந்தியாவை இந்துக்கள் நாடென்று சொல்வதை ஒருபோதும் ஏற்க மாட்டேன். இந்த நிலமெங்கும் தமிழைத் தாய்மொழியாகக் கொண்ட நாகர்கள்தான் பரவி வாழ்ந்து வந்தார்கள். என்னுடைய மூதாதையரின் மொழிகூட தமிழ்தான்' என்கிறார். மேற்கு வங்கத்தை 21 ஆண்டுகள் ஆண்டப் பெருந்தகை ஜோதிபாசு அவர்கள் அம்பேத்கரின் இக்கருத்தை வழிமொழிகிறார். அத்தகைய மொழியைத் தாய்மொழியாகக் கொண்ட இனத்தின் பிள்ளைகள் நாம் என்பதில் பெருமிதம் கொள்ள வேண்டும்.

## தமிழர்கள் உயிர்நேயவாதிகள்!

தமிழர்கள் மனிதநேயவாதிகள் அல்லர்! உயிர்மநேயர்கள். 'வாடியப் பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன்' எனப் பாடினார் வள்ளலார் பெருந்தகை. 'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா செய்தொழில் வேற்றுமை யான்' என்று போதிக்கிறது தமிழர் மறை. 'பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புக' என்றும் கூறுகிறது. பாரி முல்லைக் கொடிக்காகத் தேரை விட்டுச் சென்றிருக்க வேண்டியதில்லை. ஒரு குச்சியை ஊன்றிச் சென்றிருந்தாலே போதும். ஆனால், தேரை நிறுத்திவிட்டுச் சென்றதன் மூலம் பாரியின் உயிர்மநேயத்தை உணரலாம்.

## பழம்பெருமையல்ல! படிப்பினை.

'எந்தவொரு இனம் வரலாற்றிலிருந்து புறக்கணிக்கப்படுகிறதோ, நிராகரிக்கப்படுகிறதோ அந்த இனம் தனக்கான வரலாற்றைத் தானே எழுதிக்கொள்ளும்' என்கிறார் அண்ணல் அம்பேத்கர். வரலாற்றைக் கையிலெடுத்த எல்லா இனங்களும் உலகில் பாதுகாப்பாக வாழ்கின்றன. 'வரலாறு என்பது கடந்த காலச்செய்தியைப் பதிவுசெய்து வைக்கும் ஏடல்ல. அது நிகழ்காலத்திற்கான அடித்தளமும், எதிர்காலத்திற்கான உயிர்த்தொடர்புமாகும். என்னை உருவாக்கியதே என் நாட்டின் வரலாறுதான். என் நாட்டின் வரலாற்றைப் படித்தபின் எவ்வாறு படுத்துறங்க முடியும்? ' என்கிறான் ஹிட்லர். 'வரலாற்றைப் படிக்காதவன் வரலாற்றைப் படைக்க முடியாது' என்கிறார் புரட்சியாளர் அம்பேத்கர். 'வரலாற்றைப் படி! வரலாற்றைப் படை! வரலாறாகவே வாழ்!' என்கிறார் என்னுயிர் தலைவன் அன்பு அண்ணன் மேதகு வே.பிரபாகரன். தாழ்ந்து வீழ்ந்துக் கிடக்கிற தமிழ்த்தேசிய இன மக்கள், அடக்கி ஒடுக்கப்பட்டு ஆழ்தளத்தில் அழுத்தி வைக்கப்பட்டு சிதைந்து அழிந்துக் கொண்டிருக்கிற நிலையில் வரலாற்றின் வழியேதான் மீளெழுச்சி கொள்ள வேண்டிய தேவையிருக்கிறது. நாம் பேசுவது பழம்பெருமையல்ல! படிப்பினை. அதனைப் பேசுவது பீற்றிக்கொள்ள அல்ல! நம்மை நாமே தேற்றிக்கொள்ள! வரலாற்றில் வாழ்ந்ததையும், வீழ்ந்ததையும் வாசித்து நேசித்து அறிந்திராத இனம் ஒருபோதும் வாழாது. வேரை இழந்த மரமும், வரலாற்றை மறந்த இனமும் வாழ்ந்ததாகச் செய்தியில்லை.

## மறைக்கப்பட்ட தமிழர் வரலாறு!

வெள்ளையர்களை எதிர்த்து 8 நாட்கள் சண்டையிட்ட மராட்டிய சிவாஜியே வீரசிவாஜியென்றால் 8 மாதங்கள் வெள்ளையர்களை எதிர்த்துப் போரிட்ட எங்கள் பெரும்பாட்டன்கள் மருதுபாண்டியர்கள் எவ்வளவு பெரிய வீரர்கள்? ஜான்சிராணி இலட்சுமிபாய் வெள்ளைக்காரர்களையே எதிர்த்துச் சண்டையிடவில்லை. அருகாமையிலிருந்த பாளையக்காரர்களைத்தான் எதிர்த்துச் சண்டையிட்டிருக்கிறார். ஆனால், மானமறத்தி எங்கள் பாட்டி வேலுநாச்சியார் வெள்ளைக்காரர்களை எதிர்த்துச் சண்டையிட்டு இழந்த நிலத்தைத் திரும்பப் பெற்றார். வேலுநாச்சியாரும், கண்ணகியும், ஔவையும்தான் தமிழரின் குல தெய்வங்களாகக் கொண்டாடப்பட்டிருக்க வேண்டும். இவர்களை விட்டுவிட்டு ஜெயலலிதாவை இதயத் தெய்வம் எனக் கொண்டாடிக் கொண்டு திரிகிற ஈனர் கூட்டத்தினரை என்ன செய்வது?




## இடை வந்த சாதியெனும் இடர்!

தமிழர்கள் ஆதியிலேயே பறையர்கள்தான். ஆதிப்பாட்டன் சிவனே பறையர்தான். 'துடியன், பாணன், பறையன், கடம்பன் இந்நான்கு தவிர வேறு குடிகள் இல்லை' என்கிறது புறநானூறு. 'ஆரியர்களின் வருகைக்குப் பிறகு 3,000 ஆண்டுகளாகத்தான் பிறப்பின் அடிப்படையில் பேதம் கற்பிக்கிற வருணாசிரமத்தர்மக் கட்டமைப்பு







இருக்கிறது. ஆரியர்கள் பொருளீட்டுவதில் மேம்பட்டவர்களாக இருந்தார்கள். அவ்வப்போது எழும் கிளர்ச்சிகளை அடக்குவதற்கு இங்கு வாழ்ந்த மக்களை வருணாசிரமத் தர்மத்தை வைத்துப் பிரித்தார்கள். அதனை நம்ப வைக்க மதங்களை கொண்டு வந்தார்கள். மதங்களை நம்ப வைக்க கடவுள்களைக் கொண்டு வந்தார். கடவுள்களை நம்ப வைக்க வேத, இதிகாசப் புராணங்களைக் கொண்டு வந்தார்கள். நாம் அதனை நம்பினோம். இழிமக்களானோம். விடுதலை பெறவே முடியவில்லை' என்கிறார் அண்ணல் அம்பேத்கர். 'எந்த நாட்டிலும் இல்லாத சாதியக்கட்டுமானம் இந்தியாவில்தான் இருக்கிறது. இதனைத் தகர்க்க இருக்கிற ஒரே வாய்ப்பு சாதி மறுப்புத் திருமணங்கள்தான்' என்கிறார் சிந்தனைச்சிற்பி சிங்காரவேலர்.

## சாதி ஒழிப்பே முதலானது!

'இருட்டறையில் உள்ளதடா உலகம்! சாதி இருக்கிறது என்பானும் இருக்கிறானே?' என்று வருந்திப் பாடுகிறார் பாட்டன் பாரதிதாசன். தமிழைத் தனது உயிருக்கு நிகரென்று பாடிய பாரதிதாசன், 'சாதி ஒழித்தல் ஒன்று! நல்ல தமிழ் வளர்த்தல் மற்றொன்று!' என சாதி ஒழிப்பைத்தான் முதன்மையானதாகக் கூறுகிறான். உலகில் சாதி, மதங்கள் தோன்றுவதற்கு முன்பாகவே உழைப்பிலிருந்து மொழி தோன்றியது. அம்மொழியைப் பேசுகிற ஒரு மக்களின் கூட்டம் இனம் என்று வரையறுக்கப்படுகிறது.

## யார் நமது தெய்வங்கள்?

தமிழர் மெய்யியல் என்பதே ஓர் அறிவியல்தான். தமிழர்களுக்கென ஒரு வழிபாட்டு மரபு இருக்கிறது. கவிப்பேரரசு வைரமுத்து அவர்கள், 'தமிழர்களுக்குக் கடவுள் இல்லை; தெய்வங்கள் உண்டு' என்றார்.

**வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்**

என்கிறது தமிழ் மறை. 'ஆசை, களவு, கோபம் கொண்டவன் பேசத் தெரிந்த மிருகம். அன்பு, நன்றி, கருணை கொண்டவன் மனித வடிவில் தெய்வம்' என்கிறார் கவியரசு கண்ணதாசன். இயற்கையோடு இணைந்து இசைந்து வாழ்கிற வாழ்க்கை தமிழர்களுடையது.

## தமிழர் வழிப்பாட்டு முறை!

தமிழ்த்தேசிய இன மக்களுக்கென்று ஒரு மெய்யியல் கோட்பாடு இருக்கிறது. சூரியனிலிருந்து வெடித்துச் சிதறிய துகள்கள்தான் இத்தனைக் கோள்களும். அக்கோள்களில் ஒன்றுதான் பூமி. அது 450 கோடி ஆண்டுகளுக்கு முன்பு தோன்றியதாக அறிவியல் கூறுகிறது. உலகத்தில் எல்லா மொழிகளும் அகர ஒலியில் தொடங்குவது போல இப்பூமியும் சூரியனிலிருந்துதான் தோன்றியது என்கிறார் வள்ளுவப்பெருந்தகை. பூமியின் மேற்பரப்பு குளிர்ச்சியடைந்து அதில் நீர் உருவாகியது. அதன்மூலம் ஒரு செல் உயிரியான அமீபா தோன்றி அவைப் பரிணாம வளர்ச்சியடைந்து இன்றைக்கு இவ்வளவு உயிர்ப்பெருக்கங்கள் ஏற்பட்டிருக்கின்றன. அதனால், விண், மண், நீர், காற்று, நெருப்பு இவை ஐந்தையும் ஐம்பெரும் ஆற்றல்களாகத் தமிழர்கள் வணங்குகிறார்கள். இதுதான் இயற்கை வழிபாடு. ஆதியில் காடுகளில் இடம்பெயர்கிறான் ஒரு இனக்குழுவின் தலைவன். அத்தலைவன் இறந்துபோனால் அவனின் நினைவாக நடுகல்லை நடுவர். இது மூத்தோரைத் தெய்வங்களாக வணங்கும் மரபாகும். எவனவன் தனது மண்ணை அந்நியன் கைப்பற்றிவிடக் கூடாது என மண்ணுக்காகவும், மக்களுக்காகவும் எல்லையில் நின்று எதிரி நாட்டிடம் யுத்தம் செய்து இரத்தம் சிந்தி வீரத்தழும்பைத் தாங்கி உயிர் துறக்கிறானோ அவன் இறந்த இடத்தில் அவனுக்காக நடுகல்லை நட்டு வழிபடுவது தமிழர் மரபு. அந்த மரபில்தான் கருப்பசாமியும், ஐயனாரும், சுடலை மாடனும் குல தெய்வங்களாக ஆனார்கள்.

## இராணுவமயமாக்கல் எனும் இன அழிப்பு!

தமிழகத்தை இராணுவமயமாக்குவார்கள் என்று கூறினேன். இன்றைக்கு அவ்வாறு ஆக்கிக் கொண்டிருக்கிறார்கள். நாகலாந்து போல, மணிப்பூர் போல, காஷ்மீர் போலத் தமிழகத்தையும் மாற்ற முனைகிறார்கள். தமிழகத்திற்குள் எதற்கு துணை இராணுவம் வருகிறது? எங்கள் நிலத்தை இராணுவமயமாக்குவதை ஒருநாளும் ஏற்க முடியாது. ஈழ நிலத்தில், ஒரு மனிதனுக்கு நான்கு இராணுவ வீரன் என்கிற விகிதத்தில் இராணுவமயமாக்கி விட்டார்கள். அங்கு தமிழர் தாயகங்களில் சிங்களக் குடியேற்றங்கள் நடக்கின்றன. எல்லா ஊர்களின் பெயர்களையும் சிங்களத்தில் மாற்றித் தமிழர்கள் வாழ்ந்தத் தடம் தெரியாது மெல்ல மெல்லத் தமிழர் தாயகத்தைச் சிதைக்கிறார்கள்.

> “ உலகில் சாதி,
> மதங்கள் தோன்றுவதற்கு
> முன்பாகவே
> உழைப்பிலிருந்து
> மொழி தோன்றியது ”

## நிலத்தை இழந்தால் இனத்தை இழப்போம்!

கடந்த 3 ஆண்டுகளில் மட்டும் 1 கோடி வடநாட்டவர்கள் தமிழகத்திற்கு வந்திருக்கிறார்கள். அவர்களுக்கு குடும்ப அட்டையும், வாக்குரிமையும் கொடுக்கப்படுகிறது. அவர்கள் ஒருபோதும் தமிழர்களுக்கு வாக்குச் செலுத்த மாட்டார்கள். இதனால், நம்மிடம் அரசியல் அதிகாரம் வராது தானாய் அடிமையாகி விடுவோம். தேனியில் முக்கால்வாசி இடங்களை மலையாளிகள் வாங்கிவிட்டார்கள். இதனால் நிலமற்றக் கூலிகளாகத் தமிழர்கள் மாற்றப்பட்டுக் கொண்டிருக்கிறோம். 'நிலமற்ற இனமும், நிர்வாண உடலும் அவமானகரமானது' என்கிறார் தலைவர் பிரபாகரன். 'நிலத்தை இழந்தால் வளத்தை இழப்போம்! வளத்தை இழந்தால் இனத்தை இழப்போம். எனவே, பேரன்புகொண்டு உங்கள் தாய்நிலத்தை நேசியுங்கள்' என்கிறார் புதுவை இரத்தினதுரை. தலைநகர் சென்னையில் ஆதித்தமிழ் குடிகள் தங்கள் வாழ்விடத்திலிருந்து செம்மஞ்சேரி, கல்லுக்குட்டை, கண்ணகி நகர், பெரும்பாக்கம் போன்ற இடங்களுக்கு விரட்டியடிக்கப்படுகிறார்கள். இதன்மூலம், அந்த இடங்களை உள்நாட்டு, வெளிநாட்டு பெருமுதலாளிகளுக்கு தாரைவார்ப்பார்கள். இவ்வாறு நமது தாய் நிலத்தையும், வாழ்விடத்தையும் விட்டு நாம் வெளியேற வேண்டிய நிலை உருவாகிவிட்டது. அதனை எதிர்த்து கிளர்ச்சி செய்தால் இராணுவத்தை வைத்து ஒடுக்குவார்கள்.

## அந்நியர்களுக்கான அதிகாரம்!

'ஆண்டாள் ஒரு கற்பனைப் பாத்திரம்' என்கிறார் மூதறிஞர் ராஜாஜி. அத்தகைய ஆண்டாளுக்காகச் சண்டையிட்ட இவர்கள் பச்சிளப்பிள்ளை ஆசிபாவைக் கோயிலில் வைத்தே வன்புணர்ச்சி செய்து கொன்ற கொடுஞ் செயல் குறித்து வாய்திறக்க மறுக்கிறார்கள். 70 ஆண்டுகால இந்தியாவில் பார்ப்பனர்கள் அல்லாதோரால் பார்ப்பனர்களுக்கான அதிகாரமே நிறுவப்பட்டிருக்கிறது. அம்மையார் ஜெயலலிதா இறந்தவுடன் இந்த அதிகாரத்தை அபகரித்துக் கொண்டார்கள். இசைக்கல்லூரியில் துணைவேந்தராக ஆவதற்கு எங்கள் அண்ணன் புஷ்பவனம் குப்புசாமிக்கு இல்லாதத் தகுதி வேறு






யாருக்கிருக்கிறது? ஆனால், அவரை மறுத்து பிரமிளா நடராஜன் எனும் மலையாளியை நியமனம் செய்தார்கள். அம்பேத்கர் சட்டக்கல்லூரியில் சூரிய நாராயண சாஸ்திரி எனும் தெலுங்கரை நியமனம் செய்தார்கள். அண்ணாப் பல்கலைக்கழகத்திற்கு சூரப்பா எனும் கன்னடரை அமர்த்தியிருக்கிறார்கள்.

## தலைவர் படத்தோடு செல்வோம்!

ஒருநாள் எங்களிடம் அதிகாரம் வரும். நாங்கள் சட்டமன்றத்திற்குள்ளும், பாராளுமன்றத்திற்குள்ளும் செல்வோம். அன்றைக்கு எங்கள் தலைவனின் படத்தை உடலில் பச்சைக் குத்திக் கொண்டுதான் செல்வோம். எந்தப் பாராளுமன்றம் எங்கள் தலைவனுக்குத் தடைபோட்டிருக்கிறதோ அந்தப் பாராளுமன்றத்திற்குள் எங்கள் தலைவன் படத்தோடு என் பிள்ளைகள் செல்வார்கள். நான் சத்தியத்தின் பிள்ளை. சத்தியமே உருவாய் நின்ற பிரபாகரனின் பிள்ளை. நான் சொல்வதெல்லாம் நடந்திருக்கிறது. இதுவும் ஒருநாள் நடக்கும்.

## லீ குவான்யூ செய்த பெரும்புரட்சி!

மொத்த நாட்டையும் 45 நிமிடங்களில் சுற்றிப் பார்த்துவிடுகிற அளவுக்கு மிக மிகச் சிறிய நாடு சிங்கப்பூர்; சென்னையின் நிலப்பரப்பில் பாதிதான் மொத்த நாடும். அந்நாடு நிதிநிலை அறிக்கையில் திட்டங்களுக்கு ஒதுக்கியது போக உபரியாக நிதியிருக்கிறதென மக்களின் வங்கிக்கணக்கில் 200 டாலர் பணத்தைச் செலுத்தியது. அங்கு ஒரு வளமுமில்லை. மரங்களைக்கூட இயந்திரத்தின் மூலம் வேறொரு இடத்திலிருந்து வேரோடு பிடுங்கி வந்துதான் நடுகிறார்கள். அத்தகைய நாடு தன் நாட்டு இளைஞர்களுக்கு மட்டுமல்லாது உலக நாடுகளின் இளைஞர்களுக்கும் வேலைவாய்ப்பினைத் தருகிறது. வெள்ளையர்கள் காலத்தில் தீண்டப்படாத நகரங்களாக இருந்த மலேசியாவும், சிங்கப்பூரும் இன்றைக்கு உலகின் வளம் கொழிக்கும் நாடுகளாகவும், அறிவார்ந்த அழகியல் நாடுகளாகவும் மாறியிருக்கின்றன. இதற்குக் காரணம் லீ குவான்யூ என்கிற ஒரு புரட்சியாளன் முன்னெடுத்த ஆட்சி முறையாகும். அந்தத் தலைவனுக்கு நோக்கமும், கனவும் இருந்தது. சாதித்துக் காட்டினான். அதிகாரத்தை அடைந்து தமிழர் நிலத்தை அதனைப் போல மாற்றிக் காட்டுவோம்.

## தமிழரின் பரம்பரைக்கொடி!

சிலர் என்னைப் புலிக்கொடியை எடுத்துக் கொண்டுவிட்டார் என்கிறார்கள். 'உலகெங்கும் வாழும் தமிழர்களுக்கென ஒரே கொடியாகப் புலிக்கொடி இருக்க வேண்டும்' என என்னிடம் கூறியதே தலைவர் பிரபாகரன்தான். அது குறித்து மட்டும் 10 நிமிடங்களுக்கு மேல் பேசினார். 'சோழப் பாட்டனின் கொடியைத்தான் நான் பயன்படுத்தினேன். ஆனால், அக்கொடி எதிரிக்கு உடலைக் காட்டி பக்கவாட்டில் பாய்ந்தது. விடுதலைக்குப் போராடுவதால் நேராக எதிரியை நோக்கிப் பாய்வதாக அதனை நான் மாற்றியமைத்தேன்' எனத் தலைவர் கூறினார். இப்புலிக்கொடி என் அண்ணன் பிரபாகரன் மட்டும் ஏந்தியக் கொடியில்லை. தமிழனின் பரம்பரைக்கொடி. ஈழத்திலும், இமயத்திலும் ஒரு சேரப் பறந்தக் கொடி. கடல் பல கடந்து படை பல நடத்தி போர் செய்து பல்வேறு நிலப்பரப்பை வென்ற சோழப்பாட்டனின் கொடி நமது புலிக்கொடி.

## மனு தர்மம் எனும் மாபாதகம்!

கல்வி கற்றால் காதில் ஈயத்தைக் காய்ச்சி ஊற்று என்கிறது மனு தர்மம். அவனவன் தனது குலத்தொழிலைத்தான் செய்ய வேண்டும் என்கிறது. அதனை மீறிக் கல்வி கற்றால் வாயாலே தின்று வாயாலே மலம் கழிக்கும் ஔவால் முகம் கொண்ட மைத்திராசஜோதிகன் எனும் பேயாக அடுத்தப் பிறவியிலே பிறப்பாய் எனச் சபிக்கிறது. அடுத்தப் பிறவியில் பேயாக, நாயாக எப்படி வேண்டுமானாலும் இரு! இப்பிறவியிலே படித்து மனிதனாகு எனக் கூறி கல்வி கற்கச் செய்தார்கள் காமராசர், ஜீவானந்தம், சிங்காரவேலர் போன்ற பெருந்தலைவர்கள்.

## இந்து மதம் சுருங்கியதற்குக் காரணமென்ன?

தீண்டாமை இழிவிலிருந்து வெளியேறத்தான் கிருத்துவத்தையும், இசுலாத்தையும், பௌத்தத்தையும் தமிழர்கள் ஏற்றார்கள். இந்து மதம் ஆகச்சிறந்த மதமென்றால் இந்தியப் பெருநிலத்தைத் தாண்டிப் பரவ வில்லையே காரணமென்ன? இந்த நிலத்தில் பிறந்த பௌத்த மதம் உலகம் முழுவதும் பரவியிருக்கிறது. அரேபியாவில் பிறந்த இசுலாம் மதம் உலகம் முழுவதும் சென்று சேர்ந்திருக்கிறது. ஐரோப்பாவில் தோன்றிய கிருத்துவம் உலகம் முழுவதும் இருக்கிறது. ஆனால், இந்த நிலத்தில் தோற்றுவிக்கப்பட்ட இந்து மதம் மட்டும் ஏன் சுருங்கிக் கிடக்கிறது? உலகம் முழுவதும் ஏன் போய் சேரவில்லை? இந்து மதத்திலிருக்கிற சமத்துவமின்மையும், சாதிய இழிவும், தீண்டாமைக் கொடுமையும்தான் இதற்குக் காரணம்.

> “ தமிழர்கள் வேறு, இந்துக்கள் வேறு என்பதனைப் புரிந்துகொள்ள வேண்டும் ”

## தமிழர்கள் இந்துக்கள் அல்லர்!

சீக்கியர்கள் தங்களை இந்துக்கள் என ஏற்பதில்லை. லிங்காயத்துகள் தாங்கள் இந்துக்கள் அல்லர் எனக் கூறி தனி மதமாகி பிரிந்து சென்று விட்டார்கள். நாங்கள் அதிகாரத்திற்கு வரும்போது தனி மதமென அறிவித்து நாங்களும் அதனைப் போல பிரிந்து செல்வோம். எங்கள் ஐயா வைகுந்தர் தோற்றுவித்த அன்புவழி தனிமதம், வள்ளலார் பெருந்தகை தோற்றுவித்த சமரச சன்மார்க்கம் தனி மதம், சிவனை வழிபடுகிற சைவர்கள் தனி மதம், மாயோனை வழிபடுகிற வைணவர்கள் தனி மதம். இவர்கள் எவரும் இந்துக்கள் அல்லர். 63 நாயன்மார்களும், 12 ஆழ்வார்களும் தமிழர் நிலத்தைவிட்டு வேறு எங்கு போற்றப்படுகிறார்கள்? கண்ணப்ப நாயனார், மாறன் நாயனார், நக்கீரன், நந்தன் இவர்களெல்லாம் தமிழகம் தாண்டி வேறு எங்கு இருக்கிறார்கள்? ஆகவே, இதன்மூலம் தமிழர்கள் வேறு. இந்துக்கள் வேறு என்பதனைப் புரிந்துகொள்ள வேண்டும்.

## தமிழம் எனும் மதத்தை நிறுவுவோம்!

சைவர்களையும், வைணவர்களையும், வள்ளலார் வழி வழிபாடு செய்பவர்களையும், வைகுந்தர் வழி வழிபாடு செய்பவர்களையும் இணைத்து 'எங்கள் மொழி தமிழ், எங்கள் குடி தமிழர், எங்கள் மதம் தமிழம் ' என அறிவித்து நாங்கள் ஒரு மதத்தைக் கட்டுகிறோம். யூதர்களுக்கும், சீக்கியர்களுக்கும் மதமும், இனமும் ஒன்றாக இருப்பது போல தமிழர்களுக்கு இனமும், மதமும் ஒன்றாகத் தமிழத்தை நிறுவுவோம். சோழ நாட்டிலே பிறந்து பாண்டிய நாட்டிலே இறந்து சேர நாட்டிலே காவியமாகிப் போன காப்பிய நாயகி நம் முப்பாத்தாள் கண்ணகிப் பெருமாட்டியாவார். ஒருநாள் நம்மிடம் அதிகாரம் வரும்போது பெரும்பாட்டி கண்ணகியின் பெருவிழாவை அரச விழாவாக ஏற்று பேரெழுச்சியாகக் கொண்டாடுவோம்.





# சென்னையில் நடைபெற்ற ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டிக்கெதிரான முற்றுகைப் போராட்டம்







**ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டி நடைபெற்ற சென்னை சேப்பாக்கம் மைதானத்திற்குள் முழக்கமிட்டுப் போராடிய போராளிகள்:**

பிரபாகரன், ஐயனார், பொன்னுவேல், மகேந்திரன், ராஜ்குமார், சரவணப்பிரகாஷ், வாகைவேந்தன், சுகுமார், ஆல்பர்ட், ஏகாம்பரம், மார்டின்

**காவிரி நதிநீர் மீட்புப் போராட்டத்தில் சிறைசென்ற இனமானப் போராளிகள்!**

**முன்னெச்சரிக்கை நடவடிக்கையாகக் கைதுசெய்யப்பட்டு சிறைசென்ற போராளிகள்:**

மன்சூர் அலிகான், அன்புத்தென்னரசன், சிவக்குமார், விக்னேஷ், ராஜாராமகிருஷ்ணன், கணேசன், ராம்ராஜ், சிவக்குமார், ஞானசேகரன், சத்தியமூர்த்தி, கோகுலகிருஷ்ணன், ஜீவா, சீமான் சுரேஷ், இராயப்பன், வீரபாண்டியன், சரவணன், ரூபன், ஆகாஷ், பாபுராசன், ரங்கசாமி, சீனிவாசன், அருண்கண்ணன், முரளி, பொன்குமார், ஸ்டாலின், ராஜேஷ், ஜெரால்ட், தனசேகர், நந்தகுமார், கார்த்திக், சரத்குமார், மணிகண்டன், சிவா, சரவணக்குமார்



# கடக்க இயலா நினைவுகளின் துயர்நதி!

**– மணி செந்தில்**



**கால்கள் இழந்தும், கண், கைகள்
சிதைவடைந்தும்
சித்தம் குழம்பிப்போய்
சிரித்தும் அழுதுகொண்டும்
ஊனமாய் போய்விட்ட ஒரு பெரும்
சமுதாயம்
கத்தி அழுதபடி
காரிருளில் அங்குமிங்கும்
வாழ்ந்த மண்ணை
வாயினிலும் தலையினிலும் அள்ளி எறிந்து
ஆவிகளாய் அலைந்தபடி.
ஒப்பாரி வைக்கின்ற ஓலத்தை
என் வாழ்வில் எப்படிதான் நான் மறப்பேன்.
என் சகியே.!**

**- திரு**

எனக்கு முன்னால் அமர்ந்திருந்த சரவணன் தலைகவிழ்ந்து அமைதியாய் இருந்தார். 'என்ன?' என்று தளர்ந்த குரலில் கேட்டேன். நிமிர்ந்த சரவணனின் கண்கள் கலங்கி இருந்தன. 'கவிஞரை இரண்டு நாளா காணோம்' என்றார்.

'எங்கே போனாருன்னு தெரியல!'

எங்களால் கவிஞர் என அழைக்கப்பட்ட விழியன் என்னும் அந்த நண்பனின் முகம் ஒரு நொடி கண்முன் தோன்றி மறைந்தது இன்னும் பதட்டமாக இருந்தது.

'ஏன் ஏதாவது பிரச்சனையா?'

'இல்ல.! அவரு கொஞ்சம் நாளா தூங்கல. பத்திரிக்கையில வர்ற செய்திகள பாத்துட்டு நிறைய குடிக்க ஆரம்பிச்சிட்டாரு. திடீரென இப்ப காணோம்.'

செய்தி சொல்லிக் கொண்டிருந்த சரவணனுக்கும் கண்கள் கலங்க ஆரம்பித்தன.

'நல்லவேளை! அவரால காணாம போக முடிஞ்சது. இல்ல சரவணன்' என்ற என் பதிலை அவரும் எதிர்பார்த்திருப்பார் போல.

தலையை மீண்டும் கவிழ்த்துக் கொண்டார். உரையாடல்கள் எதுவுமற்ற, சொற்கள் தீர்ந்த மனிதர்கள் இருவரும் அந்த அறையில் ஏறக்குறைய உறைந்த நிலையில் அமர்ந்திருந்தோம்.

எங்களுக்குத் தெரியும். எங்களைப் போல பலரும் அப்படித்தான் அந்நேரத்தில் உறைந்திருந்தார்களென!

அந்த அலைபேசி இலக்கத்தைக் கண்டாலே மனதிற்குள் பதட்டம் வந்து சேர்ந்துக் கொள்கிறது. வெளிநாட்டு எண். பேசுபவர் அயல் மண்ணான அமெரிக்காவில் இருந்து புதிது புதிதாக ஈழ யுத்தச் செய்திகளை சொல்லும் எனது நண்பர் பாக்கியராசன். கடந்த சில நாட்களாக எதுவும் பேசவில்லை. இப்படிப் பேசாமல் அவர் எப்போதும் இருந்ததில்லை. இது புதிது. இப்படிப் பேசாமல் இருந்தது கொஞ்சம் ஆறுதலாகவும் இருந்தது. ஏனென்றால், அப்போது எல்லாமும் முடிந்திருந்தது. நீண்டத் தயக்கத்திற்கு பிறகு அழைப்பினை எடுத்தேன்.

'சொல்லுங்க தல!'

எதிர்முனையில் நீண்ட மௌனம்.

'தல!'

'ம்ம்ம்'

'என்னங்க?'

'ஒண்ணுமில்ல!'

அமெரிக்காவில் இருந்து அலைபேசியில் அழைப்பவரிடத்தில் என்ன என்று கேட்டால் ஒன்றுமில்லை என்கிற பதிலைப் பெறுவது சற்று விசித்திரமானது என்றாலும் எனக்கு ஆச்சர்யமானது இல்லை. கிளிநொச்சி வீழ்ந்தபோதுகூட இயக்கம் பெரிய திட்டம் வைத்துள்ளது என்கிற நம்பிக்கையை என்னுள் விதைத்தவர் அவர். தற்போது சொற்களற்ற மனிதராய். ஏறக்குறைய சலனமற்ற மௌனத்தைப் போர்த்திக் கொண்ட மனிதராய் உலர்ந்துப் போனார். 'தோத்துட்டோம் தல' என்று அவர்



தழுத்தழுத்த குரலில் சொல்லி முடிப்பதற்கு முன்னரே, நான் இங்கே அழுது விட்டேன். 'செத்துட்டோம் தல', என்று சொல்லியவாறே அந்த அழைப்பைத் துண்டித்தார். இனி அவரிடம் பகிர எந்தச் செய்திகளும் இல்லை.

எங்களுக்குத் தெரியும். எங்களைப் போல பலரும் அப்படித்தான் அந்நேரத்தில் உறைந்திருந்தார்களென

ஈழத்தாயகத்தை இழந்ததும், அந்த விடுதலைப்போரில் நாம் தோற்றதும் வெறும் சரித்திர நிகழ்வுகள் அல்ல. அத்தோல்வி ஒரு வரலாற்றுச் சம்பவமல்ல. அந்த இழப்பு தாயகத்தமிழகத்தில் வாழ்ந்து வந்த பல்லாயிரக்கணக்கான இளைஞர்களின் ஆழ்ந்த உளவியல் காயம். அத்தோல்வி மாறவே மாறாத குற்ற உணர்ச்சி. ஒரு வகையிலான வலியும், கழிவிரக்கமும் நிரம்பிய உளவியல். அந்நாட்களில் ஒரு முத்துக்குமார் எரிந்து இறந்துப் போனான். பல முத்துக்குமார்கள் இறக்கமுடியாமல் அனுதினமும் எரிந்துக் கொண்டிருந்தார்கள்.

எதிரே நடந்து வருபவர்களைக்கூட ஏறெடுத்துப் பார்க்க இயலா காயத்தினை, முகத்தில் ஏற்பட்ட வடுவாய் ஈழத்தின் அழிவு உணர்வுள்ள ஒவ்வொரு இளைஞனின் இதயத்திலும் ஆழமாய் ஏற்படுத்தி சென்று இருக்கிறது. கண்கள் சிவந்து, கை, கால்கள் நடுங்கி, எங்கே அழுது விடுவோமா என்றெல்லாம் அஞ்சி, இனி வாழ முடியுமா என்றெல்லாம் மயங்கி, தன்னிலை மறந்து ஒரு நாட்டினை அழியக் கொடுத்தோமே என்கிறக் குற்ற உணர்வில் சவமாய் திரிந்த நாட்கள் அவை. தலைவரின் உடல்போல ஒன்றைத் தொலைக்காட்சியில் காட்டுகிறார்கள் என்ற செய்தி வந்தவுடன் குலைநடுங்கி, இதுவரை கொண்ட நம்பிக்கைகள் நட்டாற்றில் போனது போல நா குழறி, உடல் வியர்த்து, நினைவற்று கிடந்த அந்தக் கோர நாட்களின் துயர் நினைவுகளை இன்று நினைத்தாலும் உள்ளம் வலிக்கிறது. அது ஒரு நம்ப முடியாத முடிவு. ஆம்! நம்ப முடியாத முடிவு.

ஏனெனில், ஈழத்தின் போர் வரலாறு நம்பவே முடியாத விசித்திரங்களைக் கொண்டது. ஆசியாவின் பெரும் வல்லாதிக்க நாடான இந்தியாவின் அமைதிப்படையைத் தோற்கடித்து ஒரு மாபெரும் தேசத்தை விடுதலைப்புலிகள்



உருவாக்கி இருந்தார்கள். பல சாகசங்களை, பல வெற்றிகளை நம்பவே முடியாத அளவிற்கு பெற்று எதிலும் இருந்து மீண்டு வருவார்கள் என்கிற பொது உளவியலை தாயகத் தமிழர்களிடையே ஏற்படுத்தி இருந்தார்கள். புலிகளின் கடந்த காலம் புகழ்பெற்ற மீள் எழுச்சிகளால் நிரம்பியது.

விடுதலைப்புலிகள் வெறும் ஆயுதங்கள் மீது பற்றுகொண்டு முரட்டுத்தனமானப் போர்களால் தங்கள் விடுதலைப்பாதையை சமைத்துக் கொண்டவர்கள் அல்ல. ஒரு தேசிய இனத்தின் பன்னெடுங்கால கனவினைத் தனது தியாகங்களால் நினைவாக்க முயன்ற ஒரு யுகத்தின் தலைவர் தயாரித்த தனித்த வார்ப்புகள். பூர்வக்குடி ஒன்றின் விடுதலைப்போராட்டத்தினை உலக வல்லாத்திக்கமே ஒற்றைக்குடையின் கீழ் நின்று எதிர்த்தது இதுதான் முதல் முறை. ஏனெனில், எதனாலும் விலைக்கு வாங்க இயலா மலையாக விடுதலைப்புலிகள் திகழ்ந்தார்கள். சமகாலத்தில் அறிவும், உணர்வும், ஆற்றலும் சமவிகிதத்தில் கலந்த அற்புதக் கலவையாக அவர்கள் விளங்கினார்கள்.

ஒரு கனவு நாட்டினை அவர்கள் உதிரமும், உயிரும் கொண்டு கட்டினார்கள். களவு இல்லாத, கற்பழிப்பு இல்லாத, ஒரு துளி லஞ்சம் இல்லாத, சாதியற்ற, பொருளாதார ஏற்றத்தாழ்வு ஒழிந்த ஒரு சமநிலை நாட்டைப் புலிகள் படைத்தார்கள். பெரும் பெரும் அறிவார்ந்த தலைவர்களால்கூட சாத்தியமற்ற ஒரு கனவினை 'பொடியன்கள்' என்று அழைக்கப்பட்ட அந்த வசீகரம் மிக்க வாலிபத் தோள்கள் கட்டி எழுப்பின. சீர்மிகுத் தமிழ்மொழியில் அறிவிப்புப் பலகைகள், உயர்படிப்பு வரை தாய்மொழிக் கல்வி என உள்ளங்கை அளவு நாட்டில் தங்கத் தமிழ்மகள் இதுவரை இல்லாத இன்முகத்தோடு ஆட்சி செய்தாள்.

தொடர்ச்சியானச் சிங்களப் பேரினவாதத் தாக்குதல்கள். உலகம் முழுக்கத் தடை, மின்சாரமோ, அடிப்படை வசதிகளோ இல்லாத வாழ்க்கை என சகலவிதமானத் தடைகளுக்கு மத்தியில் தமிழ்த்தேசியத் தலைவர் மேதகு பிரபாகரன் இப்பூமிப்பந்தில் தமிழர்களுக்கான ஒரு நாட்டை கட்டி எழுப்பியே விட்டார். எத்தனை நீண்ட காலத் தவம்? எத்தனை உயிரிழப்புகள்? எத்தனைப் போராட்டங்கள்? எத்தனைப் போர்க்களங்கள்?

பாரதியும், பாரதிதாசனும், பெருஞ்சித்திரனாரும், பாவாணரும், புலவர் கலியபெருமாளும், தமிழரசனும் இன்னும் பலரும் கண்ட கனவினை நம் கண் முன்னால் நிஜமாக்கிக் காட்டினார். தமிழரின் தொன்ம அறத்தோடும், மரபு வழி பிறந்த மறத்தோடும் கூடிய தன்மானத் தலைமையாக தலைவர் பிரபாகரன் விளங்கினார்.

எதற்கும் தலைவர் விலைபோனதில்லை. தனித்தமிழ் ஈழம் என்கிற ஒற்றைப் புள்ளியிலிருந்து எந்த நொடியிலும் விலகியதில்லை. மாகாண







முதலமைச்சர், துணை அதிபர் , வசதியான வாழ்க்கை, உச்சப்பட்ச பதவிகள், பணம் ,புகழ் என்றெல்லாம் பல்வேறு சலுகைகள் அவருக்கு முன்னால் மண்டியிட்டப் போதும் சமரசம் இல்லாத சரித்திரனாய் தலைவர் விளங்கினார். அவரும், அவரது படைகளும் நாம் நிஜ உலகில் பார்க்க இயலா அற்புதன்கள். யுத்தக் களத்தில் நின்ற போதும் பூக்களை மிதிக்காமல் சண்டையிட்டவர்கள். ஒரு கையில் துவக்கு ஏந்திய போதிலும், மறுகையால் உலகை ஆரத்தழுவி நேசித்து கவிதைப் பாடிய காவிய மனசுக்காரர்கள். மனிதநேயமும், கொள்கைப் பிடிப்பும் கொண்ட போராட்டக் காலமொன்றை அவர்கள் உருவாக்கினார்கள். திலீபனும், அங்கயற்கண்ணியும், மில்லரும், கிட்டுவும், குமரப்பாவும், புலேந்திரனும், பால்ராஜும், தமிழ்ச்செல்வனும் எனப் பட்டியலிட்டால் எழுதிக் கொண்டும், புகழ்ந்துக் கொண்டும் போய்க் கொண்டே இருக்கலாம் என்ற அளவிற்கு வான்புகழ் கொண்டு வரிசையாய் தாய் மண்ணை முத்தமிட்டு தமிழ் அன்னைக்காக விண்ணையேறிய வானவில் போராளிகள் அவர்கள்.

உண்மையில் நாம் இழந்தது ஈழம் என்கிற நம் தாய் மண்ணை மட்டுமா உறவுகளே.? அல்ல! அந்த மனிதர்களை.! கனிவு நிரம்பிய கண்களோடு, துணிவு நிரம்பிய நெஞ்சோடு உலவியப் போர்க்களத்தில் பூத்தப் பூக்களை அல்லவா நாம் இழந்திருக்கிறோம்..? இனி எக்காலத்தில் அவர்களை நாம் சந்திப்போம்..? திரைப்படங்களில் மட்டுமே சிந்திக்க முடிகிற அந்த கதாநாயகர்களை கண்டு எந்த நாளில், எவ்விடத்தில் ஆரத்தழுவி அழப்போகிறோம்.? காட்டுக்குள் இருந்தாலும் கம்பீரமாக விமானம் கட்டிப் பறந்து விண்ணை முத்தமிட்ட அந்த அறிவின் செறிவாளர்களை இனி எந்த செருக்களம் காணும்..?

இத்தனை இழப்பிற்கு பின்னரும் இன்னும் எதைக் கேட்டு ஈழத்து மண் தன் அடிமை விலங்கொடிக்க காத்திருக்கிறது.? . நினைத்தாலே மனம் கனமாகி கண்கள் குளமாகின்றன. இனியொரு காலம் பிறக்கும். மீண்டும் பாலச்சந்திரன் பிறப்பான். மீண்டும் இசைப்பிரியா தன் குரலால் பாடுவாள். இன்னொரு முறை புதுவை அய்யா தனது புத்தொளிக் கவிதைகளால் புவிக்கு ஒளியூட்டுவார். இலட்சியம் மிக்கக் கண்களோடும், கலைந்தத் தலையோடும், வசீகரனாய் திலீபன் மீண்டும் யாழ்த் தெருக்களில் திரிவார். வெடி மருந்துத் தூள் படிந்திருக்கிற ஈழப் புல்வெளிகளில் மீண்டும் காந்தள் மலரும் என்கிற நம்பிக்கை மனதின் ஏதோ மூலையில் மின்மினிப்பூச்சிப் போல சுடர்விட்டு அலைந்துக் கொண்டிருப்பதால் தான் பெருமூச்செறிதல்களோடு இந்த வாழ்வினை நம்மால் வாழ முடிகிறது.

ஒரு பத்தாண்டுகூடக் கடக்காத சூழலில் இதுவும் கடந்துப் போகும், இன்னமும் கடந்துப் போகும்; இதற்கு மேலும் உடைந்துப் போகும் என்கிற எதிர்மறை மனநிலையோடு ஈழ விடுதலையை அணுக இயலாது. தேக்கி வைத்தக் கோபம், தன் சொந்த சகோதரியின் பிறப்பு உறுப்பினை படம் எடுத்து சிங்களன் உலகத்தின் விழிகளுக்கு விருந்தாக்கி விட்டானே என்கிற அவமானம், தோல்வி தந்த வலி, தலைக்குனிவு, சொந்த சகோதரனை பறிகொடுத்த வன்மம். நம் தாய் மண்ணின் மடியில் அந்நியன் கால்பதித்து திரிகிறானே என்கிற பழிவாங்கல் உணர்ச்சி, சென்ற முறை இருந்த மறத்தோடு, உலகத்தை தழுவிய பார்வைக் கொண்டு எழுகிற இராசதந்திர நகர்வு, இன்னும் பல இன்னும் பல கொண்டு நம் தாயக விடுதலையை ஈழப்பெருந்தேசக் கனவினைச் சாத்தியப்படுத்த இந்த பூமிப்பந்தில் வாழ்கிற ஒவ்வொரு தமிழனும் ஆழ்மனதில் இருந்து உறுதியேற்கிற நாள்தான் இந்த இனப்படுகொலை நாள்.

இது இழப்பின் நாள் அல்ல. உயிர் மூச்சால் நம் உடன்பிறந்தவர்கள் காற்றில் கலந்து சுவாசமாய் நம்மை எழுப்புகிற நாள்.

**எழுவோம். திருப்பி அடிப்போம். பகை முடிப்போம்.**

**இருள் விலக்கி விடுதலைச்சூரியனின் சுடர் பிடிப்போம்.**

**தமிழர்களின் தாகம் தமிழீழத் தாயகம்!**



# தனிமனித வஞ்சம் தீர்க்கச் சட்டத்தைத் தவறாகப் பயன்படுத்துவதா?

## சீமான் கேள்வி

> “ 18 ஆண்டுகள் கழித்து வீரப்பன் குற்றமற்றவர் என நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியிருக்கிறது. அவரைக் குற்றவாளியெனக் கூறி கொலைசெய்யச் சொன்ன ஜெயலலிதா இறந்த பிறகும் குற்றவாளி ”

**காவிரி மேலாண்மை வாரியம் அமைக்கக்கோரியும், அன்பு மகள் ஆசீபாவின் படுகொலைக்கு நீதிகேட்டும் நாம் தமிழர் கட்சியின் வழக்கறிஞர் பாசறை நடத்தும் மாபெரும் கருத்தரங்கம் 28.04.18 அன்று சென்னை, எழும்பூரிலுள்ள ஃபயாஸ் மகாலில் நடைபெற்றது.**

இந்நிகழ்வில் தமிழர் கலை, இலக்கியப், பண்பாட்டுப் பாசறைப் பொறுப்பாளர் பெருந்தமிழர் பாரதிராஜா, சூழலியல் செயற்பாட்டாளர் பியூஸ் மனுஷ், வழக்கறிஞர் வே.பாலு ஆகியோர் பங்கேற்று கருத்துரை வழங்கினர். இவர்களோடு நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் அவர்களும் கருத்துரை நிகழ்த்தினார்.

மேலும், வழக்கறிஞர் பாசறையைச் சேர்ந்த வழக்கறிஞர் ரமேஷ், வழக்கறிஞர் கமிலேஷ் செல்வா, வழக்கறிஞர் சங்கர், வழக்கறிஞர் வசந்த, மாநில இளைஞர் பாசறை ஒருங்கிணைப்பாளர்கள் இயக்குனர் ஜெகதீசப்பாண்டியன், வழக்கறிஞர் அறிவுச்செல்வன் மற்றும் திருவள்ளூர் நடுவண் மாவட்டச் செயலாளர் வழக்கறிஞர் ஏழுமலை உள்ளிட்டோர் உரை நிகழ்த்தினர். நிகழ்வினை திருவள்ளூர் நடுவண் மாவட்ட இணைச் செயலாளர் வழக்கறிஞர் சுரேஷ்குமார் தொகுத்து வழங்கினார்.



இவர்களோடு வழக்கறிஞர் நெல்லை சிவக்குமார், வழக்கறிஞர் டோம்னிக் ரவி, வழக்கறிஞர் கார்த்தி, வழக்கறிஞர் சுந்தரவதனம், வழக்கறிஞர் கோபி, வழக்கறிஞர் டில்லிபாபு, வழக்கறிஞர் ரமேஷ், வழக்கறிஞர் ஆனந்த், வழக்கறிஞர் தேவா, அரக்கோணம் கார்த்தி, வழக்கறிஞர் சீனிவாசக்குமார், வழக்கறிஞர் கோகுல், வழக்கறிஞர் கோவில்பட்டி ரவிக்குமார், வழக்கறிஞர் ஹரிஹரகுமார், வழக்கறிஞர் கோபிநாத், வழக்கறிஞர், வழக்கறிஞர் ரவிச்சந்திரன், வழக்கறிஞர் பாண்டித்துரை, வழக்கறிஞர் லிங்கமூர்த்தி உள்ளிட்டோரும் நிகழ்வில் பங்கேற்றனர். காவிரி நதிநீர் மீட்புப் போராட்டத்தில் சிறைசென்றவர்களுக்கும், சிறைசென்ற போராளிகளைப் பிணையிலெடுக்கச் சட்டப்போராட்டம் நடத்தியதற்காக வழக்கறிஞர் பாசறைச் சேர்ந்தவர்களுக்கும், தலைமை நிலையச் செயலாளர் கு.செந்தில்குமார், மாநில மாணவர் பாசறை ஒருங்கிணைப்பாளர் வழக்கறிஞர் கிருஷ்ணன் ஆகியோருக்கும் நினைவுப்பரிசு வழங்கப்பட்டது.

இதில் நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் செந்தமிழன் சீமான் அவர்கள் ஆற்றிய உரையின் தொகுப்பு பின்வருமாறு, உயிர்க்கினிய உறவுகள் அனைவருக்கும் அன்பு வணக்கம்!

நீண்ட நெடுங்காலமாக நாம் நீதிகேட்டு நிற்கிறோம். பன்னெடுங்காலமாக இங்கு தீர்ப்புகள்தான் சொல்லப்படுகிறதே ஒழிய, ஒருபோதும் நீதி வழங்கப்படுவதில்லை. அண்மைக்காலங்களில் நீதியரசர்களே நீதிமன்றங்கள் மீதான அதிருப்தியை வெளிப்படுத்துகிறார்கள். புதுச்சேரி மாநிலத்தில் ஆளுநரால் நியமிக்கப்பட்ட மூன்று சட்டமன்ற உறுப்பினர்களின் நியமனம் செல்லாது என சபாநாயகர் அறிவிக்கிறார். அவ்வழக்கினை விசாரித்த நீதியரசர், அந்நியமனத்தில் தலையிட சபாநாயகருக்கு உரிமையில்லை என்கிறார். தமிழகத்தில் அரசுக்கெதிராக வாக்களித்த 11 சட்டமன்ற உறுப்பினர்களைத் தகுதிநீக்கம் செய்கிற வழக்கினை விசாரித்த அதே நீதியரசர், சபாநாயகரின் முடிவில் நீதிமன்றம் தலையிட முடியாது என்கிறார். அங்கே 3 சட்டமன்ற உறுப்பினர்களை நியமித்தது பாஜகவால் நியமிக்கப்பட்ட ஆளுநர் கிரண் பேடி. இங்கே இருக்கிற தமிழக



அரசானது பாஜகவின் ஆட்சியின் நீட்சியாகத்தான் தொடர்கிறது. இந்த அதிகாரத்தைப் பயன்படுத்தி அவர்கள் நினைத்ததையெல்லாம் சாதித்துக் கொண்டிருக்கிறார்கள். அதனால், தமிழக அரசு எக்காரணம் கொண்டும் கலையக் கூடாது என்பதில் அதிமுகவைவிட பாஜக அக்கறையோடு இருக்கிறது. வந்திருக்கிறத் தீர்ப்புகள் அதனைத்தான் உணர்த்துகிறது.

## வீரப்பன் குற்றமற்றவர்!

நம்மால் பெரிதும் நேசிக்கப்படுகிற நமது வனக்காவலர் வீரப்பன் அவர்கள் யானைகளைக் கொன்று தந்தங்களை விற்றதாகவும், சந்தன மரங்களை வெட்டிக் கடத்தியதாகவும் அவர் மேல் குற்றச்சாட்டுகள் வைக்கப்பட்டது. யானைத் தந்தங்களையும், சந்தன மரங்களையும் விற்றதாகச் சொல்கிறீர்களே அந்த வீரப்பன் காட்டுக்குள் இருந்தார்; அது உண்மையென்றால் அவர் விற்றதை வாங்கியவர்களெல்லாம் நாட்டுக்குள்தானே இருந்தார்கள் அவர்களில் ஒருவரைக்கூட ஏன் கைதுசெய்யவில்லை எனப் பல முறை கேட்டுவிட்டேன். எவரிடத்திலும் பதிலில்லை. இன்றைக்கு அவ்வழக்கில் 18 ஆண்டுகள் கழித்து வீரப்பன் குற்றமற்றவர் என நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியிருக்கிறது. அவரைக் குற்றவாளியெனக் கூறி கொலைசெய்யச் சொன்ன ஜெயலலிதா இறந்த பிறகும் குற்றவாளியாக இருக்கிறார். நமது சீயான் வீரப்பன் இறந்தும் தான் நிரபராதி என நிரூபித்திருக்கிறார்.

## திட்டமிட்டக் கொள்ளைக்காரி!

அம்மையார் ஜெயலலிதா உயிரோடு இருந்திருந்தால் சொத்துக்குவிப்பு வழக்கின் மேல்முறையீடு தீர்ப்பே வந்திருக்காது. அம்மையார் சசிகலா முதல்வராக நியமனம் செய்யக்கோரி அழுத்தம் கொடுக்காவிட்டாலும் இவ்வாறு தீர்ப்பு அமைந்திருக்காது. தண்டனை, விடுதலையென இருவேறு தீர்ப்புகள் அந்நீதியரசர்களால் முன்வைக்கப்படும். அதனால், 5 நீதிபதிகளைக் கொண்ட அமர்வுக்கு இவ்வழக்கு மாற்றப்படும் என்றுதான் எல்லோரும் எதிர்பார்த்துக் காத்திருந்தார்கள். முறைப்படி சுற்றறிக்கை அனுப்பி அழைக்காது தீர்ப்பு வழங்கப்பட்டது. ஏறக்குறைய 540க்கும் மேற்பட்ட பக்கங்களில் கூறப்பட்ட அவ்வழக்கின் தீர்ப்பில் 300 பக்கங்களுக்கு மேல் அம்மையார் ஜெயலலிதாவைத்தான் குற்றஞ்சுமத்தப்பட்டிருக்கிறது. திட்டமிட்டக் கொள்ளைக்காரி என்கிற அளவில் அதில் அம்மையார் ஜெயலலிதாவைப் பற்றிக் குறிப்பிடப்பட்டிருந்தது. ஆனால், இதுகுறித்து ஒருவரும் பேசவில்லை. அம்மாவின் வழியில் ஆட்சி நடத்துவோம் எனக் கூறும் ஒரு ஈனர் கூட்டம் இன்னும் இருந்து கொண்டுதானிருக்கிறது.

## அதிகாரவர்க்கத்தின் அடக்குமுறைகள்!

ஐயா கலைஞர் தனது ஆட்சியின்போது தொடர்ச்சியாக என்னைச் சிறைப்படுத்தி அச்சுறுத்த நினைத்தார்.

> “ஜெயலலிதா இறந்த பிறகும் குற்றவாளியாக இருக்கிறார். நமது சீயான் வீரப்பன் இறந்தும் தான் நிரபராதி என நிரூபித்திருக்கிறார்”

இராமேஸ்வரத்தில் திரைத்துறையினர் சார்பில் நடந்தக் கண்டனக் கூட்டத்தில் பேசியதற்காகத் தம்பி அமீரையும், என்னையும் சிறைப்படுத்தினார். பிறகு, அதிலிருந்து வெளியே வந்து ஈரோடு கருங்கல்பாளையத்தில் ஐயா மணியரசனும், அண்ணன் கொளத்தூர் மணியும் நடத்தியக் கூட்டத்தில் பங்கேற்றுப் பேசினேன். அதில் ராஜீவ்காந்தியைச் சர்வதேசப் பயங்கரவாதி எனப் பேசினேன் என்பதற்காக மீண்டும் என்னைச் சிறைப்படுத்தினார். பிறகு, அதிலிருந்து வெளியே வந்து நெல்லை, பாளையங்கோட்டையில் நடைபெற்ற கூட்டத்தில் பங்கேற்று பேசியதற்கு, பிரபாகரனைச் சொந்த அண்ணன் என்கிறார் எனக்கூறி சிறைப்படுத்தினார்கள். பிறகு வெளியே வந்து, ‘காந்தி தமிழர்களுக்குத் தாத்தா ஆகலாம்; நேரு மாமா ஆகலாம்; இத்தாலி சோனியா அன்னை ஆகலாம். ஜெயலலிதா அம்மா ஆகலாம். எனது சொந்த அண்ணன் பிரபாகரனை அண்ணன் எனக் கூறக்கூடாதா?’ எனக் கேட்டதற்கு மீண்டும் சிறைப்படுத்தினார்கள்.

## வரலாறு விடுதலை செய்யும்!

தமிழ் மீனவர்கள் மீதானப் படுகொலையைக் கண்டித்து சென்னை மாவட்ட ஆட்சியர் அலுவலகம் அருகே நடைபெற்றக் கூட்டத்தில், ‘என் மீனவனை அடித்தால் இங்குள்ள சிங்கள மாணவனை அடிப்பேன்’ என்று பேசியதற்காகத் தேசியப் பாதுகாப்புச் சட்டத்தைப் பாய்ச்சி சிறைப்படுத்தினார்கள். அதற்கு முன்பு, பிரபாகரனை சொந்த அண்ணன் எனக் கூறுகிறார் என ஒரு தேசியப் பாதுகாப்புச் சட்டத்தைப் பாய்ச்சினார்கள். இவ்வழக்கு விசாரணைக்கு வருகிறபோது நீதியரசர் எலிபி தர்மாராவ், ‘நீதிமன்ற வளாகத்தில் போராடிய வழக்கறிஞர்களும்தான் பிரபாகரனை அண்ணன் என்கிறார்கள். அவர்கள் மீதெல்லாம் ஏன் தேசியப் பாதுகாப்புச் சட்டம் பாயவில்லை. சீமான் மீதே ஏன் குறியாக இருக்குறீர்கள்? இந்தத் தேசியப் பாதுகாப்புச் சட்டம் தவறாகப் பயன்படுத்தப்பட்டிருக்கிறது’ எனக் கூறி விடுதலை செய்தார். மீனவர்கள் ஆர்ப்பாட்டத்தின்போது போடப்பட்ட தேசியப் பாதுகாப்புச் சட்டத்தின் மீதான வழக்கு விசாரணைக்கு வந்தபோது நீதியரசர் அரி பரந்தாமன், எலிபி தர்மாராவ் அமர்வுக்கு விசாரணைக்கு வந்தது. அப்போதும் தேசியப் பாதுகாப்புச் சட்டம் தவறாகப் பயன்படுத்தப்பட்டிருப்பதாகக் கூறி விடுதலை செய்தார்கள். புதுச்சேரியில் போடப்பட்ட வழக்கில் நீதியரசர் புவனேஸ்வரி அவர்கள், ‘தனது இனம் அழித்தொழிக்கப்படுவதைத் தாங்காது ஆத்திரம் கொண்டு பேசிய ஒரு உணர்வுமிக்க தமிழனின் பேச்சாகத்தான் சீமானின் பேச்சை இந்நீதிமன்றம் கருதுகிறது’ எனக் கூறி விடுதலை செய்தார்.

## வாழ்த்திய நீதியரசர்!

இராமேஸ்வரத்தில் போடப்பட்ட வழக்கில் நீதியரசர் லிங்கேஸ்வரன் அவர்கள் வரலாற்றுச்சிறப்பு மிக்க ஒரு தீர்ப்பை வழங்கினார். உலகப் புரட்சிகரப் போராட்டங்கள், வரலாறுகள் இவற்றையெல்லாம் சுட்டிக்காட்டி, ‘அதனைப் போல தனது இன விடுதலைக்காகப் போராடிய அந்தத் தலைவனைத் தனது அண்ணனாக வரித்துக் கொண்டு சீமான் பேசியதில்



எந்தப் பிழையுமில்லை. அதனால், சீமானும், அமீரும் குற்றமற்றவர்கள். அவர்கள் இருவரும் வழக்குகளுக்கு அஞ்சாது மக்களின் பிரச்சினைகளுக்குத் தொடர்ந்து குரல் கொடுத்துகொண்டே இருக்க வேண்டும்' எனத் தீர்ப்பு வழங்கினார் நீதியரசர். சட்டங்களும், வழக்குகளும் தனிமனித வஞ்சம் தீர்ப்பதற்கு எவ்வாறெல்லாம் தவறாகப் பயன்படுத்தப்பட்டிருக்கிறது என்பதனை இதன்மூலம் உணர்ந்துகொள்ள வேண்டும்.

## கட்டுப்பாடும், ஒழுங்கும் அவசியம்!

மக்களின் மிக நியாயமான உணர்வுகளுக்காக நாம் போராட்டத்தை முன்னெடுத்தோம். அதில் விரும்பத்தகாத ஒரு விபத்து நிகழ்ந்துவிட்டது. காவலரைத் தாக்கியவர் யாரென்று தெரியவில்லை. ஒருவேளை நமது கட்சியைச் சேர்ந்தவராகக்கூட இருக்கலாம். யாராக இருந்தாலும் காவலரைத் தாக்கியது தவறுதான். அதற்காக நாம் உளமாற வருந்துகிறோம். காவலர்களும் நம் உடன்பிறந்தவர்கள்தான். அந்நிகழ்வுக்காக ஒவ்வொரு காவலரிடமும் நமது வருத்தத்தைத் தெரிவிக்கிறோம். இதனைக் கூறுவதில் நமக்கு எந்தச் சிறுமையுமில்லை. காவலர்கள் தாக்கப்பட்ட நிகழ்வுக்கு நாம் வருத்தம் தெரிவிக்கிறோம். காவலர்கள் நம்மைத் தாக்கியதை எவரும் இங்கு பேசவில்லை. அச்செயல்களுக்குக் காவல்துறையினர் வருத்தம் தெரிவிக்கவும் மாட்டார்கள். அது அதிகாரத்திமிர். பொதுவாகப் போராட்டங்களங்களில் மிகுந்தக் கட்டுப்பாடோடும், ஒழுங்கோடும், கண்ணியத்தோடும் நடந்துகொள்ள வேண்டியது நமது கடமை.

## வாக்கே வலிமைமிக்க ஆயுதம்!

ஈழ நிலத்தில் நம்மை அடிமைப்படுத்தியவர்கள் ஆயுதத்தை வைத்து அடக்கி ஒடுக்கி அடிமைப்படுத்தினார்கள். எனவே, எந்தத் துவக்கையேந்தி அடிமைப்படுத்தினார்களோ அதே துவக்கத்தை ஏந்தித்தான் போராட வேண்டும் என்கிற நிலைக்குத் தலைவர் தள்ளப்பட்டார். ஆனால், இங்கு அப்படியில்லை. நாம் கொடுத்த வாக்கின் மூலம் ஆட்சி அதிகாரத்தை வைத்துக் கொண்டு அடிமைப்படுத்தி உரிமையை இழக்க வைக்கிறார்கள். அதனால், இங்கு நாம் தூக்க வேண்டியது துவக்கை அல்ல! வலிமைமிக்க வாக்கை.

## எதிர்கொள்ளவிருக்கிறப் பேராபத்து!

நமது நிலத்திற்குள் இருக்கும் வளங்களை உள்நாட்டு, வெளிநாட்டு முதலாளிகளுக்கான வேட்டைக்காடாக மாற்ற முயற்சிக்கிறார்கள். இன்னும் ஐந்தாண்டுகளில் இந்நிலமானது உயிரினங்கள் வாழத் தகுதியற்றதென அரசே அறிவித்துவிடும். தமிழகத்தை இன்னொரு நாகலாந்தாகவும், இன்னொரு மணிப்பூராகவும், இன்னொரு காஷ்மீராகவும் மாற்றுவார்கள். இந்நிலத்தை இராணுவமயமாக்கி காஷ்மீரில் நடக்கிற வன்புணர்ச்சிக் கொலைகளை இந்நிலத்தில் செய்வார்கள். எதிர்த்துப் போராடுகிறவர்களை தேசத்துரோகி, நக்சலைட்டுகள் எனக் கூறி அரசே சிறைப்படுத்தும்.

## சனநாயகத்தின் பிள்ளைகள்!

பிரிட்டனில் ஒரு கறுப்பினத்தவன் களவாடிவிட்டான் என்பதற்காக அந்நாட்டுக் காவல்துறை அவனைச் சுட்டுக்கொன்றுவிட்டது. அதற்காக 8,000 கோடி மதிப்புள்ள சொத்துக்களுக்கு இழப்பீட்டை ஏற்படுத்தினார்கள் கறுப்பின மக்கள். இலட்சக்கணக்கான எம்மின மக்கள் ஈழ நிலத்தில் கொலைசெய்யப்பட்டபோது ஒற்றைச் சிங்களர் மீது இங்கு தாக்குதல் தொடுக்கப்பட்டதுண்டா? கர்ப்பிணிப் பெண்ககள், வயது முதிர்ந்தவர்கள், பள்ளி, கல்லூரி மாணவர்கள் என யாவரும் அறவழியில் நின்று போராடினார்களே ஒழிய, ஒரு சிறுதாக்குதல்கூடத் தொடுக்கப்படவில்லை. ஏனென்றால், எங்களைப் போல மாண்புமிக்க சனநாயகத்தைப் போற்றுகிற பிள்ளைகள் எவருமில்லை.

## ஐ.பி.எல். எனும் சூதாட்டம்!

நாட்டின் பாதுகாப்புக்கான இராணுவத் தளவாடங்கள் உற்பத்தியிலும் அந்நிய முதலீட்டைக் கொண்டு வந்துவிட்ட பிறகு என்ன தேசப்பாதுகாப்பு இங்கிருக்கும்? வானூர்தி, துறைமுகம் என யாவற்றையும் தனியார் மூலம் உருவாக்குகிற இந்நாட்டில் என்ன இரகசியம் பாதுகாப்பாக இருக்கும்? ஐ.பி.எல். கிரிக்கெட்டை இன்னும் விளையாட்டு என நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். அதுவொரு சூதாட்டம். மனிதர்களை விற்கிற அடிமைச்சந்தை திருவனந்தபுரம், கொல்லத்தில் இருந்தது. அதனைப் போல விளையாட்டு வீரர்களை பணம் கொடுத்து ஏலம் எடுக்கிறார்கள்.

## வரிகொடா இயக்கம் வேண்டும்!

காவிரி நதிநீர் உரிமைக்காக அண்ணன் விக்கிரமராஜாவும், ஐயா வெள்ளையனும் ஒருநாள் கடையடைப்பை அறிவித்தார்கள். நீரில்லாததன் விளைவாக வேளாண்மையில்லை; வேளாண்மை இல்லாததால் வணிகம் இல்லை; வணிகம் இல்லாததால் வரியைச் செலுத்த மாட்டோம் என முடிவெடுத்து காவிரி மேலாண்மை வாரியம் அமைக்கும்வரை சரக்கு மற்றும் சேவை வரியைச் செலுத்த மறுத்திருந்தால் அண்ணல் காந்தி கண்ட ஒத்துழையாமை இயக்கம், வரிகொடா இயக்கம் போல காவிரி நதிநீர் உரிமைக்கான வரிகொடா இயக்கமாக அது இருந்திருக்கும். அதே போல திரைத்துறையில் நடிகர் சங்கம், இயக்குனர் சங்கம், தயாரிப்பாளர் சங்கம், தொழிலாளர் சம்மேளனம் என எல்லாச் சங்கங்களும் மேலாண்மை வாரியம் அமைக்கும்வரை சரக்கு மற்றும் சேவை வரியினைச் செலுத்த மாட்டோம் என அறிவித்திருக்க வேண்டும்.

## தமிழர்க்குத் துரோகம் செய்யும் தேசியக் கட்சிகள்!

காவிரியில் நீர்வரத்து இருந்தால் மணல் கொள்ளை அடிக்க முடியாது. காவிரியில் நீர் தந்தால் விவசாயிகள் விளை நிலத்தை வெளியேற்ற முடியாது. இக்காரணங்களுக்காகக் காவிரியில் நீர் வருவதை ஆளும் ஆட்சியாளர்களே விரும்ப மாட்டார்கள். மேலாண்மை வாரியம் அமைக்க மத்தியில் ஆளும் பாஜக மறுக்கிறது. இதில் காங்கிரசு கட்சியினுடைய மத்தியத் தலைமையின் நிலைப்பாடென்ன? அதுவென்ன சொல்கிறது? அதுவும் எதுவும் கூறவில்லை. ஏனென்றால், காங்கிரசும், பாஜகவும் கர்நாடகத்தில் ஆளுகிற உயரத்தில் இருக்கின்றன. மேலாண்மை வாரியம் அமைக்கக்கோரி இரு கட்சிகளில் எந்தக் கட்சி பேசுகிறதோ அந்தக் கட்சி கர்நாடகாவில் வீழும். அதனால், காங்கிரசுக்கும், பாஜகவுக்கும் எந்த வேறுபாடுமில்லை. கர்நாடகாவில் பேசுகிற அருமைச்சகோதரர் ராகுல் காந்தி, 'பாஜகவை வெல்ல வைத்தால் நரேந்திர மோடியும், எடியூரப்பாவும் தமிழகத்திற்குத் தண்ணீரைக் கொடுத்துவிடுவார்கள்' என்று பேசுகிறார். பாஜகவின் தேசியச் செயலாளர் முரளிதர ராவ் கர்நாடகாவில் தேர்தல் பரப்புரை செய்யும்போது, 'கர்நாடகத்துக்கு எந்தப் பாதிப்பும் வராது மத்திய அரசு பார்த்துக் கொள்ளும்' என்கிறார். மத்திய அமைச்சர் நிதின் கட்காரி தமிழகம் வரும்போது காவிரி நதிநீர் குறித்துப் பேசும்போது அது கடினம் என்கிறார்.

## தமிழர்களை அவமதிக்கும் பிரதமர்!

நாட்டின் பிரதமர் நரேந்திரமோடி தமிழகத்திற்கு வரும்போது தமிழகத்தின் முதல்வரும், துணை முதல்வரும் ஒரு கோரிக்கை மனுவை அவரிடம் அளிக்கிறார்கள். இந்நாடு நாடாவதற்கு முன்பிருந்தே நிலைத்து வாழும் இம்மண்ணின் பூர்வீகக் குடி மக்கள், இந்நாட்டின் விடுதலைக்காகச் செக்கிழுத்து சிறைப்பட்டு, வதைப்பட்டு இரத்தம் சிந்தி, தூக்கிலே தொங்கி போராடிய தேசிய இனத்தின் மக்கள் தங்களது நதிநீர் உரிமைக்காக நியாயமான கோரிக்கையை முன்வைக்கிறபோது அதுகுறித்து பிரதமர் பேச மறுக்கிறாறென்றால் அது தமிழர்களுக்கு எவ்வளவு பெரிய அவமதிப்பு என்பதனைச் சிந்திக்க வேண்டும்.

## ஆசீபா படுகொலை தேசத்துயரம்!

ஆசீபா எனும் 8 வயது குழந்தையை வன்புணர்ச்சி செய்து கொன்றுவிட்டார்கள். தனது குழந்தையைக்

எங்கள் தேசம்

ஆசிரியர்
செந்தமிழன் சீமான்

சட்ட ஆய்வறிஞர்கள்
நா.சந்திரசேகரன், இராவணன்

பொறுப்பாசிரியர்கள்
அ.வியனரசு, அன்புத்தென்னரசன்
இரா.வந்தியத்தேவன்

உதவி ஆசிரியர்கள்
மறத்தமிழ்வேந்தன், மணிசெந்தில், பேரரசி
செந்தில்நாதன் சேகுவேரா,
மதிமுகிலன்(அமெரிக்கா),
பேராசிரியர் அருளினியன்

மேலாளர்கள்
பாக்கியராசன்.சே - 9688899936,
செந்தில்குமார் - 9600709263

தொடர்புக்கு
சாரதிராஜா - 9500767589

புகைப்படக்கலைஞர்கள்:
கார்த்திகைவேந்தன், தாசன்

வடிவமைப்பு: redtig designs, Chennai 44

சந்தா கட்டண விவரம்
தனி இதழ் : ரூ.20
ஆண்டுக் கட்டணம் : ரூ. 350

இணையம்: www.naamtamilar.org
மின்னஞ்சல்: engaldesam@gmail.com
முகவரி: இராவணன் குடில், எண் 8,
மருத்துவமனைச் சாலை, செந்தில் நகர்,
சின்னப்போரூர், சென்னை - 116.

காணவில்லையெனக் காவல்துறையினரிடம் புகார் அளித்திருக்கிறார் ஆசீபாவின் தந்தை. அக்குழந்தையைத் தேடுகிற காவல்துறை அதிகாரியும் அக்குழந்தையை வன்புணர்ச்சி செய்திருப்பது பெரும் கொடுமை. சீருடையில் இருக்கிற காவலரைத் தாக்குவது நாட்டுக்குப் பேராபத்து என்கிற ஐயா ரஜினிகாந்த், சீருடையில் இருக்கிற காவலரே ஆசீபாவை வன்புணர்ச்சி செய்தது குறித்து வாய்திறக்கவில்லை. டெல்லியில் பேருந்தில் வன்புணர்ச்சி செய்து கொலைசெய்யப்பட்ட நிர்பயாவை 'தேசத்தின் வீரமங்கை' என அறிவிக்கிறது இந்நாடு. அப்பெண் வன்புணர்ச்சி செய்யப்பட்டது தேசத் துயரம்; தேச அவமானம். காஷ்மீரில் 7 வயது பிஞ்சுக்குழந்தை முதல் 76 வயசு மூதாட்டிவரை பத்தாயிரம் பேரை இந்திய இராணுவம் வன்புணர்ச்சி செய்திருக்கிறது. இதனை ஐ.நா. பெருமன்றத்தில் மனிதவுரிமை ஆர்வலர் ஒருவர் கூறுகிறார். அவர் இதனைப் படிக்கிறபோதே உணர்வுவயப்பட்டு தேம்பித் தேம்பி அழுகிறார். அவருக்கும், இந்நிலத்துக்கும் தொடர்பில்லையென்றாலும்கூட சக மனிதர்க்கு நிகழ்ந்தக் கொடுமையை எண்ணிக் கண்ணீர் வடிக்கிறார். ஆனால், இந்நாடு அதுகுறித்து கவலைப்பட்டதோ, வருந்தியதோ இல்லை.

## அநீதியைத் தெரியப்படுத்திய கம்யூனிஸ்ட்!

ஆசிபாவை வன்புணர்ச்சி செய்வதற்கு முன்பு கோயிலில் அக்குழந்தையின் இரத்தம் சிந்திவிடக்கூடாதென ஒரு பாலிதீன் தாளை தரையில் விரித்திருக்கிறார்கள் என்றால் அவர்களது மனநிலை எவ்வளவு கொடூரமானது? அக்கோயிலின் தர்மகர்த்தா சஞ்சீவ் ராம் 400 கிலோமீட்டர் தூரத்தில் இருந்த தனது 17 வயது மகனை அழைத்து வரச்செய்து அவனையும் வன்புணர்வு செய்யச் சொல்லியிருக்கிறான். அக்குழந்தைக்கு மயக்க மருந்து கொடுத்துவிட்டு, அவளது கால்கள் இரண்டையும் உடைத்திருக்கிறார்கள். அந்தக் குழந்தை இறந்த பிறகும் அவளை அந்தக் காவல்துறை அதிகாரி வன்புணர்வு செய்திருக்கிறான். இத்தகையக் கொடூரத்தை முழுமையாக மூடி மறைத்துவிட்டார்கள். 3 மாதங்கள் கழித்து காஷ்மீரிலிருக்கிற கம்யூனிஸ்ட் தோழர் யூசுப் இதனைப் பேசி வெளியுலகத்துக்குத் தெரியப்படுத்துகிறார். அதன்பிறகுதான் ஆசிபாவின் வன்புணர்ச்சிப் படுகொலை செய்தி வெளியே வருகிறது. ஆசீபாவைக் கொன்ற கொலையாளிகளை விடுதலை செய்யக்கோரி தேசியக் கொடியேந்தி போராடிய பாஜகவினரின் செயல் பெரும் கோபத்தைத் தருகிறது. ஆசிபாவின் படுகொலைக்கு நீதிகேட்டு வாதாடும் பெண் வழக்கறிஞரை வழக்கிலிருந்து விலகச் சொல்லி மிரட்டுகிறார்கள். இதனையெல்லாம் எப்படிப் பொறுத்துக் கொள்ள முடியும்?

## இவர்கள்தான் முத்தலாக் தடை கோரியவர்கள்?!

உத்திரப்பிரதேசத்தில் பாஜக சட்டமன்ற உறுப்பினரால் வன்கொடுமைக்குள்ளாக்கப்பட்ட இளம்பெண் தனது குடும்பத்தோடுப் போராடியதற்கு அப்பெண்ணின் தந்தையைச் சிறைப்படுத்தி சாகச்செய்தார்கள். இவர்கள்தான் இசுலாமியப் பெண்களின் பாதுகாப்புக்கென முத்தலாக்கிற்குத் தடை கொண்டு வந்தவர்கள். முத்தலாக்கிற்குத் தடைகோரி 5 இசுலாமியப் பெண்கள் தொடுத்த வழக்கிற்காக முத்தலாக் தடையைக் கொண்டு வந்த மத்திய அரசு, எட்டு கோடித் தமிழ் மக்களின் பிரதிநிதித்துவத்தைப் பெற்ற தமிழக அரசு காவிரி மேலாண்மை வாரியம் அமைக்கக்கோரி தொடர்ந்த வழக்கிற்கு மதிப்பளித்து எடுத்த நடவடிக்கையென்ன?

## நீதிபதிகள் நியமனத்திலும் அரசியல்!

உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதி நியமனத்திற்கு ஜே.எம்.ஜோசப், இந்து மல்கோத்ரா ஆகிய இருவரில் கிருத்துவர் என்பதால் ஜோசப்பை புறக்கணித்து இந்து மல்கோத்ராவை நியமனம் செய்வதன் மூலம் இவற்றில் எந்தளவு நீதியிருக்கிறது என உணர்ந்து கொள்ளலாம். காஷ்மீரில் நீதியரசராக இருந்த ஐயா பால் வசந்தகுமார் உச்ச நீதிமன்ற நீதிபதியாக வருவதற்கு வாய்ப்பிருந்தபோது அதனைப் பெறவிடக் கூடாதென்பதற்காகவே அவரது பணிக்காலம்வரை தடுத்தார்கள். இதன்மூலம் எவ்வளவு பெரிய பாரபட்சமான நாட்டில் வாழ்கிறோம் என்பதனை உணர்ந்துகொள்ள வேண்டும்.

## காவல்துறையில் சீர்திருத்தங்கள்!

காவலர்களை நாம் தமிழர் கட்சியளவுக்கு மதித்துப் போற்றுகிற ஒரு கட்சி இருக்கிறதா? ஆண் காவலர்களுக்கு 8 மணிநேர வேலை, பெண் காவலர்களுக்கு 6 மணிநேர வேலை, சிறப்புக் காவல்படை உருவாக்கம், சீருடை மாற்றம் என ஆட்சியின் செயற்பாட்டு வரைவிலேயே காவல்துறைக்கு முக்கியத்துவம் அளித்து செயல்திட்டங்களை முன்வைத்திருக்கிறோம். 'குற்றவாளிகளைப் பிடித்துக் கூண்டில் நிறுத்துவதல்ல காவல்துறையின் வேலை. குற்றவாளிகளே இல்லாத ஒரு சமூகத்தைப் படைப்பதுதான் அதன் வேலை' என எங்கள் தலைவர் பிரபாகரன் கற்பித்தது போல அத்துறையினரை மாற்ற வேண்டும் என நினைக்கிறோம். இன்றைக்கு வீதியில் நின்று போராடுகிற நாங்கள் ஒருநாள் அதிகாரத்திற்கு வருவோம். இன்றைக்கு அதிகாரத்திலிருப்பவர்கள் ஒருநாள் வீதிக்கு வருவார்கள். அப்புரட்சி தமிழகத்தில் ஒருநாள் நடக்கும்.

# நீதிபதிகள் நியமனத்தில் பாஜக அத்துமீறுகிறது!

## - வழக்கறிஞர் வே.பாலு

எனது கணவர் உயிரோடிருந்தபோது அவர் கொடுத்தனுப்பிய 10 ரூபாய் ஒலி நாடாவுக்கும், 20 ரூபாய் குறுந்தகட்டுக்கும் இருந்த மதிப்புகூட உச்ச நீதிமன்றத் தீர்ப்புக்கில்லை' என்று ஒரு பெண் சொல்லியிருக்கிறார். அந்தப் பெண் யாருமில்லை. வீரப்பனின் மனைவி முத்துலட்சுமி. முத்துலட்சுமியின் வாசகத்தில் சொன்னால், உச்ச நீதிமன்றம் தலைகவிழ்ந்து நிற்கிறது. உயர் நீதிமன்றங்கள் வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருக்கின்றன. கர்நாடகம் போன்ற மாநிலங்கள் இருக்கிற அடியாட்களை வைத்துக் கொண்டு அரசாட்சி நடத்திக் கொண்டிருக்கிறது. காவிரி மேலாண்மை வாரியம் குறித்தத் தீர்ப்பை உச்ச நீதிமன்றம் கொடுத்த 5 நிமிடங்களில் சித்தாராமையா அது நடக்காதென்கிறார். தமிழகத்தில் இதனை பாரதிரவோ, சீமானோ கூறியிருந்தால் அவர்களைத் தேசத் துரோகிகள் என்றிருப்பார்கள். அவ்வாறு கூறும் அரைக்கால் சட்டைக்காரர்களை தமிழகத்திலிருந்து விரட்டுகிற வரைக்கும், இவர்கள் யாரென்று தெரிந்துகொண்டு உரிய இடத்தில் நிறுத்துகிற வரைக்கும் இந்தப் போராட்டத்தின் குரல் ஓயக்கூடாது. பாசிசமும், நாசிசமும் இணைந்ததுதான் மோடியிசம். நமது குரல்வளையின் மீது அவர்களது கைகள் நசுக்கிக் கொண்டிருக்கின்றன.

பேரறிவாளன் வழக்கில் தீர்ப்பு வெளியாகி பல ஆண்டுகளுக்குப் பிறகு நீதிபதி கே.டி.தாமஸ், 'எங்களது மனசாட்சி உறுத்துகிறது. நாங்கள் தீர்ப்பைத் தவறாக எழுதிவிட்டோம்' என்கிறார். இது என்ன பாவ மன்னிப்பா? அத்தீர்ப்பின் மூலம் ஒருவனது வாழ்க்கையே போய்விட்டதே! நீதிமன்றம் நீதி வழங்குகிற இடமாக இருக்க வேண்டும். நீதி வாங்குகிற இடமாக அல்ல! மோடி பதவியேற்ற பின்பு தாகூர் என்கிற நீதிபதி, 2014ஆம் ஆண்டு கதறி அழுதார். நீதிபதிகள் நியமனத்தில் அரசு தலையிடுகிறது; வழக்குகளை விரைந்து முடிக்கவில்லை எனக் கோரி பிரதமருக்கு முன்னால் நீதிபதி கதறி அழுதது உலகில் வேறு எங்காவது நடந்ததுண்டா? 2016ல் உத்தரகாண்ட் ஆட்சி கலைக்கப்பட்டு குடியரசுத் தலைவர் ஆட்சி அமலுக்கு வருகிறது. கேரளாவைச் சேர்ந்த கே.எம்.ஜோசப் என்கிற நீதிபதி அதனை சட்டவிரோதம் எனக்கூறி குடியரசுத் தலைவர் ஆட்சியை ரத்து செய்கிறார். இதனாலேயே இந்து மல்கோத்ராவை மட்டும் உச்ச நீதிமன்ற நீதிபதியாக்கிவிட்டு ஜோசப்பை ஏற்க முடியாது என்று உச்ச நீதிமன்றப் பரிந்துரைகளையெல்லாம் புறந்தள்ளியிருக்கிறார்கள்.



கேட்டால், கேரளாவுக்கென்று ஏற்கனவே பிரதிநிதித்துவம் இருக்கிறது என்கிறார்கள். இது ஒரு வடிகட்டியப் பொய்.

கர்நாடகத்திலிருந்து கிருஷ்ணா பட் எனும் நீதிபதியை கீழமை நீதிமன்றத்திலிருந்து உயர் நீதிமன்றத்திற்கு நீதிபதியாகத் தேர்ந்தெடுப்பதற்கு உச்ச நீதிமன்ற தேர்வுக்குழுக்கு உயர் நீதிமன்ற தேர்வுக்குழு பரிந்துரை செய்கிறது. அப்போது கிருஷ்ணா பட் மீது பாலியல் குற்றச்சாட்டு இருக்கிறது என்று பெண் ஒருவர் கூறுகிறார். இதனை விசாரித்து அறிக்கை அளியுங்கள் என மத்திய அரசும், உச்ச நீதிமன்றமும் கேட்கிறது. கிருஷ்ணா பட் குற்றமற்றவர்; அவர் உயர் நீதிமன்ற நீதிபதியாகத் தகுதியானவர் என நீதிபதி மகேஸ்வரி அறிக்கை கொடுக்கிறார். இதனை உச்ச நீதிமன்ற தேர்வுக்குழுவும் ஏற்றுக் கொண்டது. உச்ச நீதிமன்றத் தேர்வுக்குழுவுக்குத் தெரியாமல் உயர் நீதிமன்றத் தலைமை நீதிபதிக்கு மத்திய அரசானது ஒரு கடிதம் அனுப்புகிறது. கிருஷ்ணா பட் மீது பாலியல் குற்றச்சாட்டு வந்திருக்கிறது எனக் கோரி உயர் நீதிமன்றத்திற்கு கிருஷ்ணா பட் நீதிபதியாவதைத் தடுத்து வைத்திருக்கிறது. இவ்வாறு உச்ச நீதிமன்ற தேர்வுக்குழுவினரால் தேர்ந்தெடுக்கப்பட்டு பரிந்துரைக்கப்பட்டு இதுவரை எந்த நீதிமன்றத்திலும் நியமிக்கப்படாத நீதிபதிகளின் எண்ணிக்கை மட்டும் 142. இந்த நியமனத்தை நிறுத்தி வைத்ததற்குக் காரணம் அந்நீதிபதிகள் யாவரும் ஆர்.எஸ்.எஸ். ஆட்கள் இல்லை என்பது மட்டும்தான்.

## நிகழ்வுகள்



பெருந்தமிழர் அயோத்திதாசப் பண்டிதர் அவர்களின் 104ஆம் ஆண்டு நினைவுநாளை போற்றும் விதமாக 05.05.18 அன்று , சென்னை, தாம்பரம் – சானடோரியம், தேசிய சித்த மருத்துவ நிறுவன (அயோத்திதாச பண்டிதர் மருத்துவமனை) வளாகத்தில் அமைந்துள்ள அயோத்திதாச பண்டிதரின் திருவுருவச் சிலைக்கு நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் அவர்கள் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்..




'நாம்தமிழர் அளவைக்கட்டண தானி' சேவையானது கோவை மாநகரத்தில் அறிமுகம் செய்யப்பட்டது. இச்சேவையினைப் பெற அழைக்க வேண்டிய எண்கள், 9943615522, 9566605523.



காவிரி மேலாண்மை அமைக்கக் கோரியும், ஸ்டெர்லைட் ஆலையை மூடக்கோரியும் அகில இந்திய சமத்துவக் கட்சியின் சார்பில் அதன் தலைவர் சரத்குமார் தலைமையில் 25.04.2018 அன்று சென்னை, சேப்பாக்கம் விருந்தினர் மாளிகை அருகே பட்டினிப்போராட்டம் நடைபெற்றது. இதில் நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் செந்தமிழன் சீமான் அவர்கள் பங்கேற்று உரையாற்றினார். இந்நிகழ்வில் விடுதலைச்சிறுத்தைகளின் தலைவர் தொல். திருமாவளவனும் பங்கேற்றார்.



சமவேலைக்கு சம ஊதியம் என்கிற முழக்கத்தோடு இடைநிலை ஆசிரியர்களின் நான்காவது நாள் போராட்டம் 26.04.18 அன்று சென்னை, வள்ளுவர் கோட்டம் அருகே உள்ள மகளிர் பள்ளி வளாகத்தில் நடைபெற்றது. இதில் நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் செந்தமிழன் சீமான் அவர்கள் பங்கேற்று ஆதரவு தெரிவித்தார்.



பெரம்பூர் தொகுதியின் கிழக்கு பகுதி இளைஞர் பாசறை செயலாளர் வினோத்குமார் சாலை விபத்தில் மரணமடைந்தார். அவரது இழந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கு இரங்கல் தெரிவித்து, அவர்களது துயரத்தில் நாம் தமிழர் கட்சி பங்கெடுக்கிறது.

தமிழ் மக்களின் எதிர் காலத்துக்காகக் கிடைத்தப் பொறி சீமான். இப்பொறியானது இந்தியக் குப்பைகளை மட்டுமல்ல உலகின் குப்பைகளையும் சுட்டெரிக்கும் என்பதை காலம் நிரூபிக்கும். காலமாற்றங்கள் அவரைக் கனிய வைத்திருக்கிறது. அவர் தனக்குத் தானே புடம் போட்டுக் கொண்டுள்ளார். அவரிடம் உணர்ச்சி மட்டுமல்ல உண்மையுமிருக்கிறது. சாதிக்க வேண்டுமென்ற நம்பிக்கையிருக்கிறது. சரியானப் பாதையில் சென்றால் உறுதியாக இலக்கை அடைய முடியும்.



## தமிழர்களுக்குக் கிடைத்தப் பொறி சீமான்

**- பெருந்தமிழர் பாரதிராஜா**

# மதவாதத்தை வேரறுக்க வேண்டும்!

**- பியூஷ் மனுஸ்**

தமிழகத்தில் ஒரு ஆறுகூட நல்ல நிலையில் இருக்கக்கூடாது என முடிவு செய்துவிட்டார்கள். காவிரி நதி இந்நாட்டில் அதிகப்படியாக மாசடைந்த நதியாக இருக்கிறது. பிரதமர் மோடி தமிழகம் வரும்போது அடையாறு புற்றுநோய் மருத்துவமனைக்குத்தான் வந்தார். புற்றுநோய்க்கு தமிழகத்தைத் தலைமையிடமாக மாற்ற முடிவு செய்துவிட்டார்கள். இன்னும் 10 புற்றுநோய் மருத்துவமனைகளை தமிழகத்தில் தொடங்குவார்கள். புற்றுநோயானது மாசடைந்த நீர் மூலம் பரவுகிறது. அதனால், மாசடைந்த நீரை மக்களுக்குக் கொடுத்துக் கொண்டே இருப்பார்கள். மக்கள் புற்றுநோயாளிகளாக மாறுவார்கள். அப்புறம் பணத்தை மருத்துவத்திற்கென மக்கள் கொட்ட வேண்டியிருக்கும். இன்னும் 3 ஆண்டுகளில் இராணுவத்தை இறங்கி சர்வாதிகார ஆட்சியைக் கொண்டு வருவார்கள்.

இப்போது வால்மார்ட்டை அனுமதித்தாகி விட்டது. இந்திய தொடர்வண்டித்துறை தற்போது உணவுக்காக கே.எப்.சி.யோடும், மெக்டோனால்டோடும் ஒப்பந்தம் போட்டிருக்கிறது. இனி வெளிநாட்டு உணவு நிறுவனங்கள்தான் தொடர்வண்டித்துறையில் உணவளிக்கப்போகிறது.

100 கோடி மரங்களை நடுவோம் என்கிறார் மத்திய அமைச்சர் நிதின் கட்காரி. சேலத்தில் ஒரே நாளில் 9 இலட்சம் மரக்கன்றுகளை நட்டிருக்கிறோம் என்கிறார் ஜக்கி வாசுதேவ். வாயைத் திறக்கிறபோது சொல்வதெல்லாம் பொய்யாகவே இருக்கிறது. சுங்கச்சாவடிகளை அகற்றுவோம் எனக் கூறிய நிதின் கட்காரி, இப்போது மக்களின் வரிப்பணத்தில் போடப்பட்ட 100 தேசிய நெடுஞ்சாலைகளை விற்கப் போகிறேன் என அறிவித்துவிட்டார். சேலத்தில் 8 வழிச் சாலையை உருவாக்கக் கல்வராயன் மலை, கவுத்தி மலை, வேடியப்பன் மலை, தீர்த்த மலை, ஜவ்வாது மலை ஆகிய மலைகளை நடுவில் குடைந்து அச்சாலையை அமைக்க இருக்கிறார்கள். அவ்வாறு மலையைக் குடைந்து சாலை அமைத்தால் எந்த ஓடையும் ஓடாது. மலைகள் நன்றாக இருந்தால்தான் அதிலிருந்து ஊற்றெடுத்து ஓடை உருவாகி ஆறுகள் ஓடும். மண்ணையும், நீரையும் என்றைக்கு நாம் பாதுகாக்கத் தொடங்குகிறோமோ அன்றைக்குத்தான் விவசாயத்திற்கு மதிப்பு வரும். உத்திரப்பிரதேசத்தில் 96 குழந்தைகள் ஆக்சிஜன் இல்லாததால் இறந்து போனார்கள். அங்கு மருத்துவர் கஃபீல் கான் இசுலாமியராக இருந்து இந்துக் குழந்தைகளைக் காப்பதற்காக தனது காரில் ஆக்சிஜன் குடுவைகளை வாங்கி வந்தார். இது அவரது படத்தோடு செய்தித்தாளில் வந்தவுடன் ஆதித்யநாத் யோகி அவரை 8 மாதங்கள் சிறையிலடைத்தார். அவரைச் சிறையிலடைததற்கு ஒரே காரணம் அவர் இசுலாமியர் என்பது மட்டும்தான். இன்று ஆசிபா எனும் குழந்தை வன்புணர்ச்சி செய்யப்பட்டதற்கும் ஒரே காரணம் ஆசிபா இசுலாமியர் என்பது மட்டும்தான். இசுலாமியர்களை, ரோகிங்கியர்களை ஜம்முவிலிருந்து விரட்டுவதற்காகத் திட்டமிட்டு வன்புணர்ச்சி செய்கிறார்கள். ஆசிபா போல 127 குழந்தைகள் ஒரு நாளில் வன்புணர்ச்சி செய்யப்படுகிறார்கள். இது ஒரு திட்டமிட்ட இனப்படுகொலை. வன்புணர்ச்சி செய்வதை ஒரு கருவியாகப் பயன்படுத்துகிறார்கள். அதனை இலங்கையில் தமிழ் மக்களை அழித்தொழிக்கப் பயன்படுத்தினார்கள். ஆப்பிரிக்காவிலும் அதனை ஒரு கருவியாகப் பயன்படுத்தினார்கள். தற்போது இந்திய இராணுவமும் வன்புணர்ச்சி செய்வதை ஒரு கருவியாகப் பயன்படுத்துகிறது. காஷ்மீரில் எண்ணற்ற வன்புணர்ச்சிகள் நடந்திருக்கிறது. இப்போதுதான் வன்புணர்ச்சிக் குற்றவாளிகளுக்காக ஆளுகிற ஒரு கட்சியே வீதியில் இறங்கிப் போராடுகிற கொடுமை நடக்கிறது.



சூரத்தில் 10 இலட்சம் மார்வாடிகள் ஜி.எஸ்.டிக்கு எதிராகப் போராடினார்கள். அதே சூரத்தில் 19 இடங்களில் 18 இடங்கள் பாஜகதான் வென்றது. அங்குள்ளவர்களை என்னவென்று விசாரித்தால், இந்துக் கட்சிக்குத்தான் வாக்களிப்பேன் என்கிறார்கள். இவர்களையெல்லாம் என்னவென்று சொல்வது? இந்த மதவாதத்தை வேரோடு பிடுங்கியெறிய வேண்டும். தமிழகத்தில் 8 கோடி மக்கள் இருக்கிறார்கள். இந்தியாவில் 130 கோடி மக்கள் இருக்கிறார்கள். 20 விழுக்காடு மக்கள் விவசாயத்திலிருந்து விலகியிருக்கிறார்கள். 1947ஆம் ஆண்டு 30 கோடி மக்கள் தொகையில் 24 கோடி மக்கள் விவசாயத்தைச் சார்ந்திருக்கிறார்கள். இன்றைக்கு 130 கோடி மக்கள் தொகையில் 72 கோடி மக்கள் விவசாயத்தைச் சார்ந்திருக்கிறார்கள். தமிழகத்தில் மிகக் குறைந்தது 4 கோடி மக்கள் விவசாயத்தை நம்பியிருக்கிறார்கள். அவர்களை கவனிக்காமல் விட்டால் நாடு எப்படி முன்னேறும்?

# இந்திய மக்கள் எழுதிய சட்டமில்லை; பார்ப்பனரும், பிரிட்டிஷ் கண்காணிப்பாளனும் எழுதிய சட்டம்

- வழக்கறிஞர் அறிவுச்செல்வன்

இந்தியாவிற்கு விடுதலைக் கிடைத்தது ஆகஸ்ட் 15, 1947. ஆனால், சட்டம் எழுதுவதற்குப் பேசத் தொடங்கிய நாள் 11.12.1946. அப்போது பிரிட்டிஷ் அரசின் மேலாதிக்கத்தில் ஒரு குழு அமைத்தார்கள். இந்தக் குழுவின் மூலம் 143 உறுப்பினர்களைத் தேர்வுசெய்து அதில் 5 பேரை இறுதிசெய்து வரையறைக் குழுவினை உருவாக்கினார்கள். அக்குழுவின் தலைவர்தான் அம்பேத்கர். 4 பார்ப்பனர்கள், ஒரு தாழ்த்தப்பட்டவர், ஒரு இசுலாமியர் என அமைக்கப்பட்ட இக்குழுவில் இசுலாமியர் வெளியேறிவிட்டார். மீதி நான்கு பேரை வைத்துக்கொண்டு உருவாக்கப்பட்டு பி.என்.நரசிம்மராவ் எனும் பார்ப்பனரிடம் இச்சட்டத்தைக் கொடுத்து இறுதி செய்தார்கள். அதனால், இது ஒட்டுமொத்தப் பார்ப்பனர்களுக்காக எழுதப்பட்டச் சட்டம்தானே ஒழிய, இந்திய மக்களுக்காக எழுதப்பட்டதில்லை. அதனைத்தான், இந்திய மக்கள் எழுதியதாகக் கொண்டு வந்தார்கள். இந்திய மக்களுக்கு உண்மையில் வாக்களிக்கும் உரிமை வந்தது 1951ல்தான். அதற்கு முன்பே சட்டம் வந்துவிட்டது. ஆகவேதான், தேசிய இனமக்களாகிய நாங்கள் சொல்கிறோம். இது இந்திய மக்கள் எழுதிய சட்டமில்லை. பார்ப்பனரும், பிரிட்டிஷ் கண்காணிப்பாளனும் எழுதிய சட்டம். 'இச்சட்டம் சாணக்குவியலின் மீது கட்டப்பட்ட மல்லிகை போன்றது. ஒருநாள் மல்லிகையின் மணம் போய் சாணக்குவியலின் நாற்றமெடுக்கும்' எனக்கூறி பதவியைத் துறந்தார் அம்பேத்கர்.



## கருத்தரங்கில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்:

**1.** இந்தியாவின் அரசியலமைப்புச் சட்டமானது மொழிவழி தேசிய இனங்களுக்கு ஏற்றவாறு மாற்றி, மறு ஆய்வுக்குட்படுத்தபட வேண்டுமென நாம் தமிழர் கட்சியின் வழக்கறிஞர் பாசறை கேட்டுக்கொள்கிறது.

**2.** சென்னை உயர்நீதிமன்றத்தில் தமிழ் ஆட்சிமொழி சட்டத்தின்படி, தமிழை வழக்காடு மொழியாக்க ஆவணம் செய்ய வேண்டுமென்று நாம் தமிழர் கட்சியின் வழக்கறிஞர் பாசறை கேட்டுக்கொள்கிறது.

**3.** சென்னை உயர்நீதிமன்றத்தில் நீதிபதிகள் தேர்வில் பெரும்பாலும் தமிழர்களுக்கே முன்னுரிமை கொடுக்கப்பட வேண்டும். முதல் இரண்டு நீதிபதிகள் வேற்று மாநிலத்தவர் என்ற நடைமுறையை மாற்றி இந்த மாநிலத்தைச் சேர்ந்தவருக்கே அப்பதவியைக் கொடுப்பதற்கான முறையை ஆவணம் செய்ய வேண்டுமென்று நாம் தமிழர் கட்சியின் வழக்கறிஞர் பாசறை கேட்டுக்கொள்கிறது.

**4.** உயர்நீதிமன்றத்தில் தற்போது பாதுகாப்பிலிருக்கும் மத்திய பாதுகாப்புப் படையை உடனே விலக்கிக்கொண்டு தேவையான பாதுகாப்பைத் தமிழ்நாடு காவல்துறையை வைத்தே மேற்கொள்ள வேண்டுமென்று நாம் தமிழர் கட்சியின் வழக்கறிஞர் பாசறை கேட்டுக்கொள்கிறது.

**5.** பாரம்பரியமிக்க சென்னை அம்பேத்கர் அரசு சட்டக் கல்லூரியைதற்பொழுது இருக்கும் இடத் திலிருந்து மாறுதல் செய்யக்கூடாதென நாம் தமிழர் கட்சியின் வழக்கறிஞர் பாசறை வாயிலாக வலியுறுத்தப் படுகிறது.

**6.** வன்கொடுமை சட்டத்துக்கு எதிராக, தற்போது உச்சநீதிமன்றத்தில் அளிக்கப்பட்டுள்ள தீர்ப்புக்கு எதிராக, பாராளுமன்றம் கூட்டி உடனடியாகத் தனிச்சட்டம் இயற்ற வேண்டுமென, அப்பொழுதுதான் சமூக நீதியை நிலைநாட்ட முடியுமென நாம் தமிழர் கட்சியின் வழக்கறிஞர் பாசறை உரைக்கிறது.

**7.** காவிரி மேலாண்மை வாரியம் அமைப்பது தொடர்பாக வரும் மே 3ஆம் தேதி வழக்கை விசாரிக்கக் கூடாதெனவும், மேலும் இரு வாரங்கள் வேண்டுமென மத்திய அரசு கேட்பது மிகவும் கேலிக் கூத்தான, தமிழர்களின் உரிமையைக் கொச்சைப்படுத்துகின்ற செயலெனவும், உடனடியாக அதைத் திரும்பப் பெறுவதோடு, மத்திய அரசின் இச்செயலை தமிழர்கள் வன்மையாகக் கண்டித்து, மத்திய அரசு பாராமுகமாவே இருக்குமானால் தமிழர்கள் தொடர்ந்து தெருவி லிறங்கி போராட வேண்டிய தேவை வருமென நாம் தமிழர் கட்சியின் வழக்கறிஞர் பாசறை தீர்மானம் நிறைவேற்றுகிறது.

**8.** காவிரி மேலாண்மை வாரியம் அமைக்க வேண்டுமெனக் கடந்த 1042018 அன்று சென்னையில் நடந்த இந்தியன் பிரிமியர் லீக் (IPL) மட்டைப் பந்து ஆட்டத்தை நடத்தக் கூடாதென்ற நோக்கத்தோடு, ஜனநாயக ரீதியாகப் போராடிய இயக்கங்கள் மீது கண்மூடித் தனமாகக் காவல்துறை நடத்திய தடியடியில் நடந்த விரும்பத்தகாத சம்பவங்களால், தொடர்ந்து நாம் தமிழர் கட்சியின் மீது பொய் வழக்குகள் போட்டு, போராளிகளைப் பொறுக்கிகள் போல் நடத்துகின்ற தமிழ்நாடு அரசை மிக வன்மையாகக் கண்டித்து, கொலை முயற்சி போன்ற பொய் வழக்குகளை எவ்வித நிபந்தனையுமின்றித் திரும்பப்பெற வேண்டுமென்று நாம் தமிழர் கட்சியின் வழக்கறிஞர் பாசறை வலியுறுத்துகிறது.

**9.** ஆசிபா கொலை வழக்கில் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்ய விடாமல், அங்கு இருக்கின்ற குற்றவியல் நடைமுறை சட்டத்தின்படி எவ்விதமான விதியையும் பின்பற்றவிடாமல், சங் பரிவாரின் வழக்கறிஞர் குழு செய்கின்ற அட்டகாசம் அட்டூழியத்தை இம்மாநாடு கண்டித்து, தொடர்ந்து ஆசிபாவின் கொலை வழக்கிற்கு நீதி கேட்டு மன்றத்தில் வழக்காடுகின்ற பெண் வழக்கறிஞரை பாராட்டி அவருக்கு எப்பொழுதும் துணை நிற்குமென நாம் தமிழர் கட்சியின் வழக்கறிஞர் பாசறை தீர்மானம் நிறைவேற்றுகிறது.

**10.** சட்டக் கல்விகளைத் தனியார் நிறுவனங்களுக்கு ஒதுக்குவதை,அவற்றைத் தனியார் மயமாக்குவதை நாம் தமிழர் கட்சியின் வழக்கறிஞர் பாசறை வன்மையாகக் கண்டிக்கிறது.

**11.** நிர்வாக நடுவராக வருவாய்த்துறை அதிகாரிகள் இருந்த நியமனத்தைத் தற்போது வந்திருக்கின்ற நகர மயமாக்கல் சட்டத்தின்படி காவல்துறை துணை ஆணையரிடம் ஒப்படைக்கின்ற அம்முறையை நாம் தமிழர் கட்சியின் வழக்கறிஞர் பாசறை வன்மையாகக் கண்டிப்பதோடு, வருவாய்த் துறையின் கையில் இருக்கின்ற அதிகாரத்தைக் கொண்டுபோய்க் காவல் துறையின் கையில் கொடுப்பது மிகுந்த சட்ட ஒழுங்கை கெடுத்து சர்வாதிகாரப் போக்கோடு காவல் துறை நடப்பதற்கு வழி வகைச் செய்யுமென, உடனடியாகக் காவல் துறை வசமிருக்கின்ற இப்பொறுப்பினைமீண்டும் வருவாய்த் துறை வசமே ஒப்படைக்க வேண்டுமென நாம் தமிழர் கட்சியின் வழக்கறிஞர் பாசறை வலியுறுத்துகிறது.

**12.** பாரம்பரியம் மிக்கச் சென்னை உயர்நீதிமன்றத்தின் பெயரை மெட்ராஸ் உயர்நீதிமன்றம் என்பதிலிருந்து உடனடியாகத் தமிழ்நாடு உயர்நீதிமன்றம்என்று மாற்றுவதற்கு ஆவணம் செய்ய வேண்டுமென மத்திய அரசை நாம் தமிழர் கட்சியின் வழக்கறிஞர் பாசறை வலியுறுத்துகிறது.

**13.** இந்தியாவில் தற்போது இருக்கின்ற மின்னணு வாக்குப் பதிவு முறைகுறித்த சந்தேகங்களும் அச்சங்களும் பொதுமக்களுக்கும் இயக்கங்களுக்கும் இருப்பதால், வெளிப்படையான சனநாயகத் தன்மை ஏற்பட வேண்டுமென்றால், மின்னணு வாக்குப்பதிவு முறையை மாற்றி மீண்டும் பழைய முறையான வாக்குச் சீட்டு முறையைப் பயன்படுத்துவதே உணமையான சனநாயகத்துக்கு ஆதரவாக இருக்குமென இவ்வழக்கறிஞர் குழு எதிர்பார்ப்பதோடு அதற்கேற்ப இந்தியத் தேர்தல் ஆணையம் உடனடியாக மின்னணு வாக்கு முறையைத் தடை செய்து மீண்டும் வாக்குச் சீட்டு முறையை அறிமுகப்படுத்த வேண்டுமென நாம் தமிழர் கட்சியின் வழக்கறிஞர் பாசறை வலியுறுத்துகிறது.

**14.** பிற்படுத்தப்பட்ட ஒடுக்கப்பட்ட சமூகத் திலிருந்து சட்டக்கல்வியைப் பயின்று வருகின்ற, அதுவும் கிராமப்புறங்களில் இருந்து பயின்று வரும் மாணவர்களுக்கு, இளம் வழக்கறிஞர்களுக்கான பயிற்சி தொடங்கியதிலிருந்து மூன்று ஆண்டுகளுக்கு ஊக்கத் தொகை வழங்கவேண்டுமெனத் தமிழ்நாடு அரசை நாம் தமிழர் கட்சியின் வழக்கறிஞர் பாசறை வலியுறுத்துகிறது.

**15.** சுற்றுச்சூழலுக்கு எதிராகவும், தமிழக மக்களின் வாழ்வாதாரங்களைப் பாதிக்கின்ற வகையிலும் தற்பொழுது இருக்கின்ற கூடங்குளம், கல்பாக்கம் அணு உலைகளும், ஸ்டெர்லைட் (Sterlite) ஆலையும், நியுட்ரினோ (Neutrino) அணுப் பரிசோதனை மையமும், ஹட்ரோகார்பன் (Hydrocarbon) திட்டம்போன்ற நாசகரமான திட்டங்களைத் தமிழக மண்ணில் செயற்படுத்தி வருகின்ற தமிழ்நாடு அரசினுடைய செயலையும், அதற்குத் துணையாய் உள்ள மத்திய அரசின் செயலையும், வன்மையாகக் கண்டிப்பதோடு, இப்படி மக்களுக்கு எதிராகச் செய்கின்ற திட்டங்களனைத்தையும் உடனடியாக எவ்விதமான நிபந்தனையும் இன்றிக் கைவிட வேண்டுமென நாம் தமிழர் கட்சியின் வழக்கறிஞர் பாசறை வலியுறுத்துகிறது.



நாம் தமிழர் கட்சியின் பொன்னேரி பகுதிச்செயலாளர் களப்போராளி பாலாஜி அவர்கள் இருதய நோயால் உயிரிழந்தார். அவரை இழந்து வாடும் அவரது குடும்பத்தினர்க்கு இரங்கல் தெரிவித்து அத்துயரத்தில் நாம் தமிழர் கட்சி பங்கெடுக்கிறது.

# கேரளா சென்ற மாணவர் தந்தை மரணம் நீட் தேர்வின் மூலம் மத்திய அரசு செய்த பச்சைப்படுகொலை!

## – சீமான்





திருவாரூர் மாவட்டம் திருத்துறைப்பூண்டி அருகேயுள்ள விளக்குடியைச் சேர்ந்த மாணவர் கஸ்தூரி மகாலிங்கம் நீட் தேர்வுக்காகக் கேரளா சென்றபோது அவரது தந்தை கிருஷ்ணசாமி மாரடைப்பால் மரணம் அடைந்திருப்பது ஆழ்ந்த மனவேதனையையும், தாங்கொணாத் துயரத்தையும் தருகிறது.

பல்வேறு ஏற்றத்தாழ்வுகளையும், பொருளாதார மாறுபாடுகளையும், நிலவியல் வேறுபாடுகளையும் கொண்ட இந்நாட்டில் ஒற்றைத்தேர்வு முறையான நீட் என்பது சமூக நீதிக்கும், சனநாயகத்துக்கும் புறம்பானது எனத் தொடக்கம் முதலே இத்தேர்வு முறையினை எதிர்த்து வருகிறோம். வருணாசிரமத்தை வலியுறுத்தும் நவீன குலக்கல்வி திட்டமான நீட் தேர்வின் மூலம் கடந்தாண்டு தங்கை அனிதாவை காவுகொண்ட மத்திய அரசானது தனது கோரப்பசி அடங்காது இப்போது கிருஷ்ணசாமியைப் பலிகொண்டிருக்கிறது. நீட் தேர்வையே முழுவதுமாக எதிர்த்துத் தமிழகம் போராடிக் கொண்டிருக்கையில் வலுக்கட்டாயமாக நீட் தேர்வினை திணித்து அதுவும் வெளிமாநிலங்களில் கேரளாவிலும், இராஜஸ்தானிலும் நீட் தேர்வு மையங்களை அமைத்து வஞ்சகம் புரிந்தது மத்திய அரசு. இதன்மூலம் நீட் தேர்வை எதிர்கொள்ளாமலே இலட்சக்கணக்கான மாணவர்கள் தோல்வியுறுவார்கள் என எச்சரித்ததையும் மீறி நீட் தேர்வினை வேற்று மாநிலங்களில் அமைத்ததே இன்றைக்கு ஒரு உயிரைப் போக்கியிருக்கிறது.

தமிழகத்திலே உரிய கட்டமைப்பு வசதிகள் இருக்கிறபோதும் திட்டமிட்டு வேற்று மாநிலத்தில் நீட் தேர்வு மையங்களை அமைத்தார்கள். நீட் தேர்வு வேண்டாம் எனக் கூறிப் போராடுகிறவர்களை, நீட் தேர்வு மையங்களைத் தமிழகத்தில் அமைக்கக்கோரி போராட வைக்க வேண்டும் என்கிற உள்நோக்கம் ஒன்றே இதற்குக் காரணமாகும்.

நீட் தேர்வு மையங்களில் வினாத்தாள் வேற்று மொழியில் இருத்தல், வினாத்தாள் பற்றாக்குறை, ஒரே மாணவருக்கு இரு இடங்களில் தேர்வு மையம் ஒதுக்குதல், நுழைவுச்சீட்டு வராமலிருத்தல், நுழைவுச்சீட்டில் வரிசை எண் மாறியிருத்தல் எனப் பல்வேறு குளறுபடிகளோடும், குழப்பத்தோடும் நீட் தேர்வினை நடத்த வேண்டிய அவசியமென்ன வந்தது? வினாத்தாளையும், நுழைவுச்சீட்டையுமே குளறுபடிக்குள்ளாக வைத்துக்கொண்டு மாணவிகள் அணிந்திருந்த நகைகள் வரையிலும் கழற்றச் சொல்லி கெடுபிடி செய்வது யாரை ஏமாற்ற? இவ்வாறு கெடுபிடிகள் என்கிற பெயரில் மாணவர்களை வைத்ததன் மூலம் என்ன சாதித்தார்கள்? அனிதா என்கிற மகளைக் கொன்று தந்தையை அழ வைத்தவர்கள், இன்றைக்குத் தந்தை கிருஷ்ணசாமியைக் கொன்று மகனை அழ வைத்திருக்கிறார்கள். மருத்துவக் கனவோடு தேர்வெழுதச் சென்று தனது தந்தையை இழந்துவிட்டு தவிக்கும் அந்த இளம்பிள்ளைக்கு மத்திய, மாநில அரசுகள் என்ன பதில் சொல்லப் போகிறார்கள்? ஈடுசெய்ய முடியாத பேரிழப்பைச் சுமந்து நிற்கும் மாணவர் கஸ்தூரி மகாலிங்கத்தினை என்ன வார்த்தைகூறி தேற்றப் போகிறார்கள்? தேர்வெழுதிவிட்டு வெளியே வந்து, தனது தந்தை இறந்ததுகூடத் தெரியாமல் 'அப்பா எங்கே?' எனக் கேட்ட அந்த மகனிடம் என்ன பதில் சொல்லப் போகிறது மத்திய அரசு?

மாணவனின் தந்தை கிருஷ்ணசாமியின் மரணத்திற்கு வெறுமனே நிவாரணம் அளிப்பது மட்டும் தீர்வாக அமையாது. நீட் தேர்விலிருந்து தமிழகத்திற்கு விலக்குப் பெறுவதே இனியும் இழப்புகளைச் சந்திக்காமல் தடுக்க இருக்கிற ஒரே வழியாகும். கல்வியை மாநில பட்டியலுக்கு மாற்றவேண்டும் என்ற மக்கள் கோரிக்கை இனி மன்றங்களில் ஒலிக்கவேண்டும்.

# கர்நாடகத் தேர்தலில் தனித்துப் போட்டியிடும் தர்சன் புட்டனையாவிற்கு நாம் தமிழர் கட்சி ஆதரவு! – சீமான்

கர்நாடக விவசாயிகள் சங்கத்தின் முன்னாள் தலைவர் பெருமதிப்பிற்குரிய மறைந்த ரிஷி புட்டனையா அவர்கள் தமிழகக் கர்நாடக நதி நீர் உரிமை சிக்கலைப்பற்றித் தெளிந்த சிந்தனை கொண்டவராக, தமிழகத்து விவசாயச் சங்கங்களோடு சுமூகமான உறவை பேணி, தமிழர்களுக்கான காவிரி நீதி உரிமையை ஆதரித்துக் கர்நாடக விவசாயிகளிடையேயும் மக்கள் மன்றத்திலும் பேசிவந்தவர். இந்திய விவசாயிகளின் தகவல் களஞ்சியமாக வாழ்ந்தவர். கடந்த பிப்ரவரி மாதம் புட்டனையா அவர்கள் மறைந்த பொழுது தமிழகத்திற்காகக் கர்நாடகாவிலிருந்து வந்த ஆதரவு குரலை இழந்துவிட்டதாகப் பெரும் வருத்தமும் வலியும் ஏற்பட்டது.

இந்நிலையில் பெருமதிப்பிற்குரிய புட்டனையா அவர்களின் மகன் மரியாதைக்குரிய தர்சன் புட்டனையா அவர்கள் அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றாமல் இங்கே எந்த மாற்றத்தையும் நிகழ்த்த முடியாது என்றறிந்து அமெரிக்காவில் தான் பார்த்த பெரும் பதவியை உதறித்தள்ளி தந்தையில் வழியில் விவசாயிகளுக்காக மாண்டியா மாவட்டத்தில் மேலுகோட்டை தொகுதியில் சுயேட்சையாகக் களமிறங்கிருப்பதை அறிந்து மகிழ்ந்தேன். தந்தையைப் போலவே முற்போக்குச் சிந்தனை கொண்ட தனயனும் காவிரி நதிநீர் உரிமை சிக்கலில் தன் சரியான அறிவுப்பூர்வமான நிரந்தரத் தீர்வுக்கான நிலைப்பாட்டைத் தெரிவித்திருப்பதைக் கண்டு பெரு மகிழ்ச்சி கொண்டேன்.



விவசாயிகளின் ஆதரவை பெற்று, தங்களைத் தனி மதமாக்க கோரும் வீரசைவ லிங்காயத்து மக்களின் ஆதரவை பெற்று மேலுகோட்டை தொகுதியில் போட்டியிடும் அன்புச்சகோதரன் தர்சன் புட்டனையாவிற்கு எனது முழு ஆதரவையும் வழங்கி அவரை ஆதரித்துக் கர்நாடக நாம் தமிழர் கட்சி தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்டு அவரின் வெற்றிக்குத் துணை நிற்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். கர்நாடக விவசாயிகளின் நலன் காக்கும் போராட்டத்திலும், லிங்காயத்துகளைத் தனிமதமாக அறிவிக்கக்கோரும் போராட்டத்திலும் என்றென்றைக்கும் நாம் தமிழர் கட்சி உற்ற துணையாக இருக்கும் என்று உறுதியளிக்கிறேன்.

மண்ணையும் மக்களையும் நேசித்து மாற்றத்தை உருவாக்க கொள்கை உறுதிகொண்டு தேர்தல் களத்தில் தனி ஒருவனாக நெஞ்சுறுதியோடு நிற்கும் எனதன்பு சகோதரன் தர்சன் புட்டனையா பெருவாரியான வாக்கு வித்தியாசத்தில் வெற்றிபெற மனதார வாழ்த்துகிறேன்.





கர்நாடக சட்டமன்றத் தேர்தலில் போட்டியிடும் தர்சன் புட்டனையாவை நாம் தமிழர் கட்சியின் சார்பில் சர்வதேசப் பொறுப்பாளர் முனைவர் பால் நியூமன் அவர்கள் நேரில் சந்தித்து வாழ்த்துகளைத் தெரிவித்தார். இத்தோடு கர்நாடக மாநில நாம் தமிழர் கட்சியினர் புட்டனையாவுக்கு ஆதரவாகப் பரப்புரையும் செய்தனர்.



# திமிறி நிற்கும் மணல் கொள்ளையர்களை இரும்புக்கரம் கொண்டு ஒடுக்க வேண்டும்

**– சீமான்**

திருநெல்வேலி மாவட்டம் விஜயநாராயணம் அருகேயுள்ள நம்பியாற்றில் மணல் கொள்ளையைத் தடுக்கச் சென்ற தனிப்பிரிவு முதல்நிலைக் காவலர் ஜெகதீசன் துரை அவர்கள் மணல் கொள்ளையர்களால் தாக்கப்பட்டுப் படுகொலை செய்யப்பட்டார் எனும் செய்தியானது அதிர்ச்சியினையும், மனவேதனையையும் தருகிறது. அவரை இழந்துவாடும் அவரது குடும்பத்தினருக்கும், சக காவலர்களுக்கும் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்து அவர்களது துயரத்தில் முழுமையாகப் பங்கேற்கிறேன்.

மணல் என்பது இயற்கை அளித்த கொடை; பூமித்தாயின் மடி. அதுவே உலகின் தலைசிறந்த வடிகட்டியுமாகும். நீராதாரத்தைத் தக்கவைக்கும் பெரும் சேமிப்புக் கலனாகவும் அது விளங்குகிறது. அத்தகைய இன்றியமையாத மணல் தமிழகத்தின் அத்தனை ஆறுகளிலிருந்து திருட்டுத்தனமாக அள்ளப்பட்டுத் தமிழகத்தின் ஜீவநதிகள் யாவும் இன்றைக்குச் செத்துக் கொண்டிருக்கின்றன. ஒரு கியூபிக் மீட்டர் மணலை அள்ளினால் மூன்று கியூபிக் மீட்டர் நிலத்தடி நீர் மட்டம் கீழே போகும் என்பது இயற்கை விதி. இதனைக் கடைபிடிக்காது வரைமுறையற்றுத் தொடர்ச்சியாக மணலை அள்ளுவதன் மூலம் சுற்றுச்சூழல் சமநிலை சீர்கேட்டு நிலத்தடி நீர்மட்டம் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறது.

அண்டை மாநிலமான கேரளாவில் மணல் கொள்ளை என்பதே முற்றிலுமில்லை என அறுதியிட்டுச் சொல்கிற அளவுக்கு அந்த மண்ணின் ஆட்சியாளர்கள் தங்களது இயற்கை வளத்தைப் பாதுகாத்து வைத்திருக்கிறார்கள். ஆந்திராவிலும், கேரளாவிலும்கூட மணல் அள்ளுவதற்கு ஏகப்பட்ட கெடுபிடிகள் போடப்பட்டிருக்கின்றன. ஆனால், தமிழகத்திலோ மணல் கொள்ளை மூலம் தமிழகத்தின் இயற்கை வளம் கேரளாவுக்கும், ஆந்திராவுக்கும், கர்நாடகாவுக்கும் திருட்டுத்தனமாகக் கொண்டு செல்லப்பட்டுக் கட்டுமானப் பணிகளுக்குப் பயன்படுத்தப்படுகிறது. தமிழகத்திற்குரிய நீராதாரங்களைத் தடுத்து அண்டை மாநிலங்கள் அணை கட்டுவதற்குக்கூடத் தமிழகத்திலிருந்துதான் மணல் செல்கிறது என்பதன் மூலம் மணல் கொள்ளையின் கோர முகத்தை அறியலாம்.

மணல் கொள்ளையைத் தடுக்கச் சென்ற ஒரு காவலரையே இன்றைக்கு அடித்துக் கொலை செய்கிறார்களென்றால் மணல் கொள்ளையர்கள் எந்தளவுக்குத் திமிறி நிற்கிறார்கள் என்பதனையும், அவர்களுக்கு இத்தகைய துணிவு ஆட்சியாளர்களின் துணையில்லாது வந்திருக்குமா என்பதனையும் சிந்திக்க வேண்டும். தமிழகத்தில் ஏற்படும் எத்தகைய ஆட்சி மாற்றமும் இந்த மணல் கொள்ளையர்களைப் பாதிப்பதில்லை. திமுகவின் ஆட்சியாக இருந்தாலும், அதிமுகவின் ஆட்சியாக இருந்தாலும் மணல் கொள்ளையர்களின் ஆதிக்கத்திற்கு எவரும் இங்கு முடிவுகட்ட முனைவதில்லை. ஆற்று மணலைக் கொள்ளையடித்தால் குண்டர் சட்டம் பாயும் என்று அரசுகள் ஒப்புக்குச் சொல்கிறதே ஒழிய, மணல் கொள்ளையர்கள் மீது குண்டர் சட்டம் பாய்ந்ததாக இதுவரை செய்தியில்லை. மாறாக, மணல் கொள்ளைக்கு எதிராகப் போராடுகிறவர்கள் மீதுதான் வழக்குகள் பாய்ச்சப்படுகின்றன என்பதன் மூலம் இவ்வரசுகள் யாருக்கானது என விளங்கிக் கொள்ள வேண்டும்.

மணல் கொள்ளைக்கெதிராகக் களம் காணுவோர் கொலை செய்யப்படுவதும், தாக்கப்படுவதும், அச்சுறுத்தப்படுவதும் தமிழகத்தில் மிகச் சாதாரணமாய் நடந்தேறி வருகிறது. கடந்த 2014ஆம் ஆண்டு அரக்கோணம் அருகே மணல் கொள்ளையைத் தடுக்க முற்பட்ட முதன்மைக் காவலர் கனகராஜ் டிராக்டர் ஏற்றிக் கொலை செய்யப்பட்டார். அதேபோல மணல் கொள்ளைக்கெதிராக நின்ற விருதுநகர் வட்டாட்சியர், காஞ்சிபுரம் வட்டாட்சியர், தாமிரபரணியில் மணல் கொள்ளைக்கெதிராகப் போராடிய கம்யூனிஸ்டு கட்சியின் நிர்வாகி சுடலைமுத்து ஆகியோரும் மணல் கொள்ளையர்களால் படுகொலை செய்யப்பட்டிருக்கின்றனர். மணல் கொள்ளையர்கள் மீது நடவடிக்கை எடுக்காது மெத்தனப்போக்கைக் காட்டும் ஆளும் வர்க்கத்தின் துணையோடேதான் இவையாவும் நடக்கிறது. காவிரியில் நீர் பெறுவதற்குத் தமிழக ஆட்சியாளர்கள் அலட்சியம் காட்டுவதன் பின்னணியிலுள்ள முதன்மையான காரணங்களில் மணல் கொள்ளை முதன்மையானது என்பதன் மூலம் இதன் பின்புலத்திலுள்ள அதிகார வலைப்பின்னலை அறிந்து கொள்ளலாம்.

எனவே, காவலர் ஜெகதீசன் துரையின் கொலைக்குக் காரணமானவர்களை உடனடியாகக் கைது செய்து தண்டிப்பதோடு, இந்நிலை இனியொரு காவலருக்கோ, சமூக ஆர்வலருக்கோ நிகழாமல் தடுக்க மணல் கொள்ளையர்களை இரும்புக்கரம் கொண்டு ஒடுக்க வேண்டும் எனவும், அனைத்து வித வளச்சுரண்டலையும் கண்காணித்துத் தடுத்து நிறுத்த தனிப் பிரிவை உருவாக்க வேண்டும் எனவும் தமிழக அரசை நாம் தமிழர் கட்சி சார்பாகக் கேட்டுக் கொள்கிறேன்.



தனித்தமிழ்வேங்கை மறத்தமிழ்வேந்தன்

# ஈழ விடுதலை இனத்தின் விடுதலை



முள்ளி வாய்க்கால் முடிவிலை கூறடா!
எள்ளி நகைத்த இனவெறிச் சிங்களன்
தன்தலை வெடித்துத் தரையில் சிதறுவான்
உன்னிடம் நாட்டை ஒருநாள் கேட்பான்
புத்தத் துறவியாய்ப் பொய்யுரு பூண்டவன்
செத்து நாறுவான் செருக்கள வீதியில்
குழந்தை குட்டியைக் கொன்றே மகிழ்ந்தவன்
இழந்தே அனைத்தும் ஏந்துவான் நம்மிடம்
இனவெறிப் படுகொலை எவனடா மறப்பான்?
அனலாய்க் கொதித்த அற்றைய நாளினில்
எடுபிடி இலங்கை இந்திய அரசுடன்
கொடுஞ்செயல் புரிந்ததைக் குவலயம் மறக்குமா?
கருணா கூட்டக் களவுப் பயல்களின்
திருட்டு ஆட்சியால் தீர்ந்தது தமிழினம்
தலைவர் தந்த தமிழ்க்கொடை சீமான்
தலைமுறை நீயடா! தம்பி உணரடா!
விரட்டி அடித்திட விரைந்தெழு வாயடா!
திரட்டடா படையைத் தீந்தமிழ் நீயடா!
கதையாய் வீரக் கல்லறை கதைத்திடும்
விதையாய் விழுந்த உயிர்கள் முளைத்திடும்
ஈழ விடுதலை இனத்தின் விடுதலை!
ஆழ் மனத்துடன் அடியடா போர்ப்பறை!




### மது குடிப்பவர்கள் திருந்தினால்தான் மது விலக்கை அமல்படுத்த முடியுமென அமைச்சர் ஜெயக்குமார் கூறியிருக்கிறாரே?

இக்கருத்து முற்றிலும் தவறானது. ஒரு தாய்க்குத்தான் தனது குழந்தைக்கு எது தேவையென்பது தெரியும். எதனைக் கொடுக்க வேண்டும்? எதனைக் கொடுக்கக்கூடாது என தாயானவள் நன்றாக அறிந்து வைத்திருப்பாள். அதனைப் போல நாட்டையாளுகிற ஆட்சியாளர்களும் மக்களுக்குத் தாயாக விளங்க வேண்டும். மக்களுக்கு எது தேவையென அவர்களின் தேவையறிந்து சேவைசெய்ய வேண்டும். அதுதான் ஒரு நல்லாட்சிக்கான இலக்கணம். தமிழக அரசோ மக்களுக்குத் தேவையானப் படிப்பகங்களைத் திறக்காது, மக்களைச் சாகடிக்கும் குடிப்பகங்களைத் தெருவுக்கு இரண்டு திறந்து வைத்திருக்கிறது. இவ்வாறு, மதுபானக்கடையின் மூலம் வருமானம் ஈட்டுவதையே பொருளாதாரக் கொள்கையாகக் கொண்டிருக்கிறார்கள். இவர்களிடம் மாற்றுப்பொருளாதார பெருக்கத்திற்கானத் திட்டங்கள் எதுவுமில்லை. பாலின் சந்தை மதிப்பு மட்டும் 3 இலட்சம் கோடி என மதிப்பிடப்படுகிறது. தமிழகத்திற்குத் தேவையானப் பாலை ஆந்திர மாநில முதலாளிகள்தான் இறக்குமதி செய்கிறார்கள். அவற்றிலெல்லாம் கவனம் செலுத்தாது தமிழக அரசு 26,000 கோடிக்கு மதுவை விற்று சாராயப் பொருளாதாரத்தில் மக்களைச் சாகடிக்கிறது. இந்தியாவில் எத்தனையோ மாநில முதல்வர்கள் இருக்கிறார்கள். அவர்களில் யாருக்கும் சாராய ஆலைகளில்லை. தமிழக ஆட்சியாளர்கள்தான் மதுபான ஆலைகள் வைத்திருக்கிறார்கள். தமிழக அரசியல் களத்தில் திமுகவும், அதிமுகவும் கடுமையாக மோதிக்கொள்ளும். ஆனால், திமுக ஆட்சியின்போது அதிமுகவினரின் சாராய ஆலைகளிலிருந்து மதுவினைக் கொள்முதல் செய்வார்கள். அதிமுக ஆட்சியின்போது திமுகவினரின் சாராய ஆலைகளிலிருந்து மதுவினைக் கொள்முதல் செய்வார்கள். இதன்மூலம், எதனைப் பற்றியும் பேசத் தகுதியற்றவர்களாக இவர்கள் இருக்கிறார்கள். எனவே, பொறுப்பான இடத்திலிருக்கிற அண்ணன் ஜெயக்குமார் அவர்கள் இவ்வாறு பேசக்கூடாது. தனது கருத்தினைத் திருத்திக்கொள்ள வேண்டும்.

### ஊதிய உயர்வு கேட்டுப் போராடும் இடைநிலை ஆசிரியர்களின் போராட்டத்திற்கு ஆதரவளித்திருக்கிறீர்களே?

இடைநிலை ஆசிரியர்களுக்கும், நிரந்தர ஆசிரியர்களுக்கும் ஒரே மாதிரியான பணிநேரம்தான் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. இருவரும் ஒரே மாதிரியான உழைப்பைத்தான் செலுத்துகிறார்கள். எனவே, 'சம வேலை சம ஊதியம்' எனக் கோரிக்கை வைத்துப் போராடுகிற அவர்களது போராட்டமானது மிக நியாயமானது. ஒரு நாட்டின் எதிர்காலமே அந்நாட்டின் வகுப்பறையில்தான் தீர்மானிக்கப்படுகிறது என்கிறார்கள். அத்தகைய எதிர்காலத்தைத் தீர்மானிப்பவர்களாக இருக்கும் ஆசிரியப் பெருந்தகைகளே இன்றைக்கு வீதிக்கு வந்து வாழ்வுரிமைக்காகப் போராடுகிறார்களென்றால் இச்சமூகம் எவ்வளவு மோசமான நிலைக்குச் சென்று கொண்டிருக்கிறது என்பதனையும், இவ்வாட்சியானது துளியும் அறமற்று நடக்கிறது என்பதனையும் நாம் புரிந்துகொள்ள வேண்டும்,

### மெரீனா கடற்கரையில் போராடுவதற்குத் தடை விதிக்கப்பட்டிருப்பதை எவ்வாறு பார்க்கிறீர்கள்?

மெரீனா கடற்கரையில் போராடுவதற்கு ஒருபோதும் அனுமதிக்க மாட்டார்கள். ஏனென்றால், போராடுவதற்கு அனுமதித்தால் மாணவர்களும், இளைஞர்களும், உழைக்கும் மக்களும் பெருமளவில் ஒன்றுகூடி ஜல்லிக்கட்டுக்காக நடந்தத் தைப்புரட்சி போல மீண்டும் ஒரு புரட்சிகரமானப் போராட்டத்தை முன்னெடுப்பார்கள். அதன்மூலம் மத்திய அரசிற்கு மிகப்பெரிய அழுத்தமும், நெருக்கடியும் ஏற்படும். பாஜக ஆட்சியின் நீட்சியாக தமிழகத்தில் ஆட்சி நடைபெறுவதால் தமிழகத்தின் ஆட்சியாளர்கள் அத்தகைய அழுத்தத்தை மத்திய அரசிற்குத் தர விரும்ப மாட்டார்கள்.